# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

டிசம்பர் 2007 ஜீவியம் 13 மலர் 8

*இம்மாத மலரில். . . .*

பொருளடக்கம்

*பக்கம்*

| | |
|---|---|
| சாவித்ரி | 2 |
| ஆன்மாவின் இயற்கை | 4 |
| இம்மாதச் செய்தி | 15 |
| லைப் டிவைன் | 16 |
| முடிந்ததை முழுமையாக முடிப்பது முக்கியமான முறை | 28 |
| மேல் மனது - ஆழ் மனது | 33 |
| அன்பர் கடிதம் | 36 |
| ஆன்மீகம் மற்றும் மனோதத்துவ உண்மைகள் | 37 |
| அடுத்த கட்டம் | 41 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 52 |
| தினசரிச் செய்திகள் | 56 |
| ஆத்மாவின் விடுதலை | 58 |
| யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள் | 63 |

❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

### ஜீவியத்தின் ஓசை

✡ பல வருடங்களாக தியானத்தின் மூலம் கிடைக்கக் கூடிய அறிவை நாம் லைப் டிவைன் படிப்பதன் மூலம் பெறுகிறோம்.

✡ எந்த அளவிற்கு நமக்குள் மௌனம் நிலைக்கிறதோ அந்த அளவிற்கு நம் சாதனை அதிகரிக்கும். சத்தம் சாதிக்காது. ஆனால் மௌனம் சாதிக்கும்.

## P.79 Forsaken wheeled the circle of the days.

**காலத்தின் சுழற்சி கைவிடப்பட்டது.**

- ✡ **வாழ்வின் தறுதலைக் கூட்டம் தூரத்தில் மூழ்குகிறது.**
- ✡ **மௌனம் மட்டுமே நிலையான நண்பன்.**
- ✡ **வாழ்வின் நம்பிக்கையற்று மோனத்தில் சுருங்கினான்.**
- ✡ **சொற்கடந்த சாட்சியின் கோவில் சிலை.**
- ✡ **பரந்த கோபுரத்தின் எண்ணத்தினூடே எழுந்த மனிதன்.**
- ✡ **அதன் வளைவுள் கலங்கிய அனந்தம்.**
- ✡ **புலன் அறியாத சிறகு மோட்சத்தை நாடும்.**
- ✡ **பிடிபடாத சிகரத்தின் அறைகூவல் அவனை எட்டியது.**
- ✡ **கடந்ததின் ராஜ்யத்தின் பரந்த வெளியில் வாழ்ந்தான்.**
- ✡ **எண்ணம் நடமாடும் இடத்தைக் கடந்த அவன் ஜீவன்.**
- ✡ **கரையை உடைத்துக் கடந்த அவன் எண்ணம் பிரபஞ்ச திருஷ்டியைத் தொட்டது.**
- ✡ **பிரபஞ்ச ஜோதியைப் பிரதிபலிக்கும் கண்கள்.**
- ✡ **பொன்வெளிப் பிரவாகம் இதயத்தையும், மூளையையும் ஊடுருவியது.**
- ✡ **அழியும் உடலில் பாயும் அழியாத சக்தி.**
- ✡ **ஆனந்த சமுத்திரத்தின் அடியில் ஓடும் ஊற்றோடை.**
- ✡ **இனம் தெரியாத இன்பம் படையெடுப்பாக வருகிறது.**
- ✡ **எதையும் சாதிக்கும் மூலத்தையறிந்த சூட்சுமம்.**
- ✡ **எல்லாம் அறிந்த பூரிப்பின் கவர்ச்சி.**
- ✡ **எல்லையற்றதும் மையமான ஜீவன் விரிந்து பூமியின் பரிதியை எட்டும்.**
- ✡ **அளவிறந்த ஆத்மாவின் கர்மத்தை நோக்கிய பயணம்.**
- ✡ **காற்றெனும் கிழிந்த திரையைக் காற்றில் பறக்கவிட்டான்.**



- ✡ **மங்கிவரும் கோட்டில் மடியும் சித்திரம்.**
- ✡ **புவியின் சுபாவச் சிகரம் அவன் காலடியில் புதைந்தது.**
- ✡ **அனந்தத்தை எட்ட மேன்மேலும் உயர்ந்து சென்றான்.**
- ✡ **கடலெனும் மௌனம் கனத்து அவன் கடப்பதைக் கண்டது.**
- ✡ **காலத்தைக் கடந்த பிரம்மத்துள் கதிரென நுழையும் அம்பு.**
- ✡ **காலமெனும் வில்லில் எழும் படபடக்கும் சூடு.**
- ✡ **சூரியனின் கதிர் சூரியனையடைகிறது.**
- ✡ **விடுதலையின் பெருமையை எதிர்க்கும் ஏற்றம்.**
- ✡ **இருண்ட ஜடத்தின் ஆதிசேஷனின் வால்.**
- ✡ **உறங்கும் அனந்தத்தை அடித்தெழுப்பும் அதிர்ச்சி.**
- ✡ **ரூபத்தின் ஆழ்ந்த இருளின் அடித்தளம்.**
- ✡ **தூக்கமெனும் வாயிலாக மரணம் அவன் காலடியில் கிடந்தது.**

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

(Physical organisation) உலகத்தின் இயக்கம் தானே நடப்பது. இரு செயல்களுக்கு இடையேயுள்ள வெளி, அடுத்தச் செயலைத் தயார்படுத்தத் தேவைப்படுவது. ஜட உலகத்திற்குக் காலம் தேவை. உணர்வுக்கும், மனதிற்கும் தேவையில்லை. ஜடம், உணர்வாக ஆயிரமாயிரம் ஆண்டுகள் ஆகும். நம்மை நேரே சத்தியஜீவியத்திற்குப் போகச் சொல்கிறார் பகவான்.

***ஒரு படி நகர ஆயிரமாண்டாயிற்று. முடிவான சத்திய ஜீவியத்திற்குப் போனால் பல்லாயிரம் ஆண்டு சுருங்கும்.***

# ஆன்மாவின் இயற்கை

N. அசோகன்

அண்மையில் வெளிவந்துள்ள “இரகசியம்” என்ற புத்தகம் வாழ்க்கையில் சாதிப்பது எப்படி என்ற இரகசியத்தைத் தெரிவிக்கிறது. அப்புத்தகத்தில் நமக்குள் இருக்கும் தெய்வீக அம்சம் எல்லாச் சிறப்புகளையும் உள்ளடக்கியது என்றும் கூறுகிறது. அடுத்ததாக இந்த தெய்வீக அம்சத்தின் சிறப்பை நாம் எந்த அளவிற்குப் போற்றுகிறோமோ, அந்த அளவிற்கு நம் வெளி வாழ்க்கையும் சிறப்படையும்என்றும் சொல்கிறது. தெய்வீக அம்சம்என்று அப்புத்தகம் குறிப்பிடுவது பகவானும், அன்னையும் சைத்தியப்புருஷன் என்று வர்ணிக்கும் நம்முடைய வளர்ச்சியடையும் ஆன்மாவே ஆகும். நம்முடைய சைத்தியப்புருஷன் ஆனந்தமும், இனிமையும், அன்பும் நிரம்பியது. ஆகவே இத்தகைய தன்மையுடைய சைத்தியப்புருஷனை நாம் பாராட்டிக்கொள்ளும் அளவில் நம்முடைய வாழ்க்கையும் அதே அளவிற்கு ஆனந்தமும், இனிமையும் நிரம்பியதாக மாறும். இந்த ஆன்மீக ஆனந்தமும், இனிமையும் நம்முடைய வாழ்க்கையில் வெளிப்படும்பொழுது ஐஸ்வரியமாகவும், பூரண ஆரோக்கியமாகவும், சுமுகமான உறவுகளாகவும், சாதனைகளாகவும் மாறுகின்றன.

உள்ளிருக்கும் ஆன்மாவைப் பாராட்டிக்கொள்ள விரும்புகின்றவர்கள் அது வெளிவருவதற்கு உதவும் வகையில் தன்னுடைய வாழ்க்கைப் பாணியை மாற்றிக்கொள்ள முன்வரவேண்டும். ஆகவே நம்முடைய வாழ்க்கையை உண்மை, நேர்மை, சுமுகம், அன்பு, தைரியம், சரணாகதி, நன்றியறிதல் போன்ற நற்பண்புகள் நிரம்பியதாக அமைத்துக்கொண்டால் நம் ஆன்மா அந்த அளவிற்கு வேகமாக நம் வாழ்க்கையில் வெளிப்பட வாய்ப்புள்ளது.

நம்முடைய உண்மையான ஜீவன் இந்த ஆன்மாவே அன்றி அகந்தை



இல்லை. ஆகவே நம்முடைய அகந்தையை வெளியேற்றிவிட்டு, காலியான அந்த இடத்தில் நம்முடைய ஆன்மாவை நிலைநாட்டினால், நம் ஆன்மா அதற்குரிய வேகத்தில் செயல்பட்டு, சாதாரணமான வாழ்க்கையில் ஒரு வருடத்தில் முடிகின்ற காரியத்தை ஒரே நாளில் முடித்துக் கொடுக்கும். ஆன்மா வெளிவருகின்றபட்சத்தில் நம்மைக் காலத்திலிருந்து காலத்தைக் கடந்த நிலைக்கும், முடிவானதிலிருந்து முடிவற்ற நிலைக்கும், பகுதியிலிருந்து முழுமைக்கும், அடுத்தடுத்த நிகழ்வுகளிலிருந்து ஒரே சமய நிகழ்வுகளுக்கும், வெளியிலிருந்து உள்நிலைக்கும், குறுகிய கண்ணோட்டத்திலிருந்து பரந்த கண்ணோட்டத்திற்கும் நம்மை மாற்றுகிறது. இப்படி நம்முடைய நிலைமை மாறும்பொழுது நம்முடைய வாழ்க்கையில் ‘முடியாது’ என்று விட்ட காரியங்களெல்லாம் முடியும்என்ற நிலைக்கு மாறுகின்றன.

நம் ஆன்மாவினுடைய ஆனந்தம் மற்றும் அன்பு ஆகியவை மிகவும் சக்தி வாய்ந்ததாக இருப்பதால் நம்முடைய கடந்த காலக் கர்மாவையும் அழித்து, கர்ம பலனாக நாம் அனுபவிக்கின்ற உடல் நலக்குறைவு, நீடித்த வறுமை மற்றும் தொடர் ஏமாற்றங்கள் ஆகியவற்றிலிருந்தும் நம்மை விடுவிக்கின்றன. அடுத்ததாகத் தூரத்தில் இருக்கின்ற வாய்ப்புகளை நம் அருகில் கொண்டுவந்து உடனடியாகக் கைமேல் பலனாக மாற்றித் தருகின்றன. அளவு என்பது நம்முடைய ஆன்மாவிற்கு ஒரு பொருட்டில்லை. நூற்றுக்கணக்கிலும், ஆயிரக்கணக்கிலும் நமக்கு வருமானத்தைக் கொடுப்பது ஆன்மாவிற்கு எவ்வளவு சுலபமோ, அவ்வளவு சுலபமாக லட்சக்கணக்கிலும், கோடிக்கணக்கிலும்கூட நம் ஆன்மாவால் வருமானத்தை ஈட்டித்தர முடியும். அம்மாதிரியே ஒருவருக்கு ஐஸ்வரியத்தை வழங்குவது ஆன்மாவுக்கு எவ்வளவு சுலபமோ, அவ்வளவு சுலபமாக ஒரு பெரிய குழுவிற்கும் அதே ஐஸ்வரியத்தை நம் ஆன்மாவால் வழங்க முடியும்.

ஆன்மீக நிலையில் வாழ்கின்ற ஒருவருக்கு அகம்தான் உண்மையா-னது. புறம்என்பது அகத்தின் பிரதிபலிப்பாகத்தான் தெரியும். அதாவது அவருக்கு அகம் காரணமாகவும், புறம் பலனாகவும் தெரியும். ஆனால் சாதாரண மனநிலையில் இருப்பவருக்கு புறம்தான் காரணமாகவும், அகம் வெறும்பலனாகவும்தான் தெரியும். உதாரணமாக, ஒரு சாதாரண

மனிதனைக் கேட்டால், தன் வருமானத்தைப் பார்த்த பின்புதான் தனக்கு சந்தோஷம் வரும் என்பான். அதாவது அவனுக்குப் பணம் காரணம்; சந்தோஷம் பலன். ஆனால், ஆன்மீக மனநிலையில் இருப்பவர்க்கு அவருக்கு உள்ளே இருக்கின்ற மகிழ்ச்சிதான் வெளியிலிருந்து பணத்தைக் கொண்டு வருகிறதுஎன்பதுதான் உண்மை. அதாவது அவருக்கு மகிழ்ச்சிதான் காரணம்என்றும், பணம் வெறும் பலன்என்றும் தெரிகிறது.

ஆன்மீக மனநிலைஎன்பது நம்முடைய அகந்தைமயமான மனநிலையை விட மிகவும் பரந்ததாகும். ஆகவே அப்படிப்பட்ட மனநிலையில் உள்ளவர்க்கு பொறுப்புணர்வும் அந்த அளவுக்கு அதிகமாகவே இருக்கும். ஆகவே ஆன்மீக மனநிலையில் இருப்பவர் தம்மைச் சுற்றி இருப்பவர் எல்லோருடைய வாழ்க்கையில் நடக்கின்ற நிகழ்ச்சிகளுக்கெல்லாம் தாமும் பொறுப்பாளி என்றுணர்கிறார். ஏனென்றால் அவர்களெல்லாம் தம்மைச் சேர்ந்தவர்கள் என்று அவர் ஏற்றுக்கொள்கிறார். அப்பட்சத்தில் அவர்களுடைய குறைபாடுகளையெல்லாம் தம்முடைய குறைபாடுகளாக ஏற்கின்றார். ஆகவே அவர்களுடைய குறைபாடுகளுடைய பிரதிபலிப்பாகத் தமக்குள் என்ன இருக்கிறதோ, அதைக் கண்டறிந்து மாற்றிக்கொள்ள முன்வருவார். இதை அவர் அமைதியாகச் செய்வார். அடுத்தவரிடம் தென்படுகின்ற குறைகளுக்காக அவர்களைக் குறை சொல்லவும்மாட்டார். இத்தகைய பொறுப்புணர்வு அவருடைய உயர்ந்த மனநிலையின் ஓர் அம்சமாகும். இன்னோர் அம்சம் என்னவென்றால், அவருடைய மனநிலை பரந்து, விரிந்து, உயர்ந்து இருப்பதால் அவருக்குக் கிடைக்கின்ற நன்மைகள் எல்லாம் தாமாகவே அவரைச் சுற்றியுள்ளவர்களுக்கும் பரவும். அவர் செல்வராகவும், உடல்நலம் மிக்கவராகவும், சந்தோஷமானவராகவும், முன்னேறிக்கொண்டிருப்பவராகவும் இருப்பதால், அவரோடு நல்லெண்ணத்-துடன் தொடர்புகொள்பவர்கள் எல்லோருக்கும் இச்செல்வம், உடல்நலம், சந்தோஷம், முன்னேற்றம், ஆகியவை எல்லாமே கிடைக்கும். அவருடைய ஆன்மீகச் சூழல் அவரைச் சுற்றி ஒரு பாசிடிவ்வான சூழலை ஏற்படுத்தும். அந்தச் சூழலுக்குள் நுழைபவர் எவராக இருந்தாலும், உடனே அவர்களுடைய எனர்ஜி லெவல் அதிகரிக்கும்.

நம்முடைய ஆன்மா நம்முடைய இடைவிடாத ஆர்வம் மற்றும்



சரணாகதியின் பலனாகத்தான் வெளிவருகிறது. அவரவருடைய ஆன்மாவைப் பாராட்டிக்கொள்வதோ அல்லது உதாசீனம் செய்வதோ அவரவருடைய இஷ்டத்தைப் பொருத்தது. நம்முடைய ஆன்மா அதனைப் பாராட்டிக்கொள்ள வேண்டும்என்று வலியுறுத்துவதில்லை. ஆனால் நம்முடைய அகந்தையோ, நம்முடைய ஆசைகளோ, அவற்றை நாம் உதாசீனம் செய்ய அனுமதிப்பதில்லை. தாம் இருப்பதை நமக்கு அடிக்கடி நினைவுப்படுத்தி, தம்மைத் திருப்திபடுத்தச் சொல்லி நம்மை வற்புறுத்தும். ஆனால் நம்முடைய ஆன்மா அதனைப் பாராட்டிக்கொள்ளவும் அல்லது அதனை மறந்து நாம் விரும்புகின்ற சாதாரண வாழ்க்கையை வாழவும் பூரணச் சுதந்திரத்தை நமக்கு அளிக்கிறது. அப்படி ஒருவர் தம்முடைய ஆன்மாவைப் பாராட்டி, அதை வெளிக்கொணர்ந்துவிட்டார் என்றால், அதன் பிறகு அதன் வழி நடப்பது நல்லது. மாறாக வெளி வந்த ஆன்மாவை மீண்டும் உதாசீனம் செய்து பழையபடியே அவர் அகந்தை நிலைக்கே போனார்என்றால், அது ஒரு பெரிய இழப்பாக அமையும்.

சிலபேர் யோகம் செய்யாமலேயே தற்செயலாகத் தங்களுடைய ஆன்மாவை உணரும் வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். விபத்தில் சிக்கியவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டுப் பிழைக்கமாட்டார்கள்என்று டாக்டர்களால் கைவிடப்பட்டு உயிர் பிரிகின்ற கடைசிக் கட்டத்திற்கு வந்தவர்களும் இதில் அடங்குவர். உடம்பைவிட்டு வெளியே வந்த இவர்கள் தங்கள் ஆன்மாவைச் சந்திப்பதன் பலனாக மீண்டும் உடம்புக்குள் போக முடிகின்றது. அதன் விளைவாகத் தொடர்ந்து உயிர் வாழவும் முடிகின்றது. சில சமயங்களில் அதிகாரப்பூர்வமாக இறந்துவிட்டதாக அறிவித்த பிறகும்கூட இப்படிப்பட்டவர்கள் உயிர் பிழைத்திருக்கின்றார்கள். ஆகவே இவற்றை எல்லாம் வைத்துப் பார்க்கும்பொழுது ஆன்மாவிற்கு மரணத்தை முறியடிக்கும் சக்தியும் இருப்பதாகத் தெரிகிறது. உடம்பை விட்டு வெளியே வந்த அனைவரும் ஒரு நீண்ட, இருண்ட குகையின் வழியே செல்வதாகவும், அதன் பின்னர் ஓர் ஒளிமயமான பந்தைப் பார்ப்பதாகவும் சொல்கிறார்கள். அந்தப் பந்தின் வெளிச்சம் பிரகாசமாக இருந்தாலும், கண் கூசும்படியாக இருப்பதில்லை. அந்த ஒளிப்பந்து வார்த்தைகளே இல்லாமல் இவர்களோடு உரையாடல் நிகழ்த்துகிறது. இவர்கள் யார்? எப்படி உடம்பைவிட்டு வெளியே

வந்தார்கள்? பூமியில் என்ன செய்து கொண்டிருந்தார்கள்என்ற விவரங்களையெல்லாம் தெரிந்துகொண்ட பின்னர் அந்த ஒளிப்பந்து மீண்டும் அவர்களை உடம்பிற்குள் நுழைந்து வாழ்க்கைப் பயணத்தைத் தொடரச் சொல்கிறது. அவர்கள் மீண்டும் உடம்பிற்குள் புகுவதற்கான எனர்ஜியை அந்த ஒளிப்பந்தே அவர்களுக்கு வழங்குகிறது. அந்த ஒளிப்பந்தின் அருகிலிருக்கும்பொழுது, அதனிடமிருந்து நிறைய அன்பும், ஆதரவும், மகிழ்ச்சியும் கிடைத்ததாக இவர்கள் சொல்கிறார்கள். உடம்பிற்குள் மீண்டும் சென்றால், இந்த அன்பு, ஆதரவு, மகிழ்ச்சி, எல்லாவற்றையும் இழந்துவிடுவோம்என்று நினைப்பதால், பலர் உடலுக்குள் மீண்டும் செல்ல தயக்கம் காட்டியதாகவும் தெரிவிக்கிறார்கள். மேலும் ஒரு சில நொடிகளில் அந்த ஒளிப்பந்து இவர்களுடைய முழு வாழ்க்கையையும், எந்த விவரத்தையும் விடாமல் திரைப்படம்போலப் போட்டுக் காட்டுகிறது. இவர்கள் விவரிக்கின்ற அனுபவங்களை படிப்பதற்கே நமக்குப் பதினைந்து அல்லது இருபது நிமிடங்களாகின்றன. ஆனால் இப்படி மீண்டும் திரும்பி உடலுக்குள் வந்த சிலர், தாங்கள் உடம்பைவிட்டு வெளியேறிய பொழுது சுவர்க்கடிகாரம் என்ன நேரத்தைக் காட்டிக்கொண்டிருந்ததோ அதே நேரத்தைதான் இப்பொழுதும் காட்டிக்கொண்டிருக்கிறது என்கிறார்கள். இதை வைத்துப் பார்க்கும்பொழுது, நம்முடைய ஆன்மா காலம் கடந்த நிலையில் இருப்பதாக நாம் அறிந்துகொள்ளலாம். இப்படி ஆன்மாவைச் சந்தித்த அனுபவம் கிடைத்தபின்னர், பல பேர் அடுத்தவர்கள் சொல்லாமலேயே அவர்களுடைய எண்ணங்களை அறிந்துகொள்ளும் திறனும் பெற்றுக்கொண்டுள்ளதாகச் சொல்கிறார்கள். மேலும் இந்த அனுபவத்திற்குப்பின்னர் உயிர் வாழ்வதன் அருமையை உணர்ந்து கொண்டதாகவும், தம்முடைய மீதி வாழ்நாட்களை ஒரு பொறுப்புணர்வு மற்றும் இலட்சியத்துடன் கழிப்பதாகவும் சொல்கிறார்கள்.

இப்படித் தற்செயலாக ஆன்மாவைச் சந்தித்தவர்களுக்கே இத்தகைய நல்ல பலன்கள் கிடைக்கும்பொழுது, ஆன்மாவைச் சந்திக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே யோகப் பயிற்சியில் ஈடுபடுகின்றவர்களுக்கு இன்னும் எவ்வளவு பெரிய பலன்கள் கிடைக்கக்கூடும்என்பதை நாம் கருத வேண்டும். அன்னை தம்முடைய அஜெண்டாவில், ஒரு வருடத்திற்கு



இடைவிடாமல் நம்முடைய ஆன்மாவை நினைத்துக்கொண்டிருந்தால், அந்த ஒரு வருடக் கடைசியில் நம் ஆன்மாவைச் சந்திக்க வாய்ப்புள்ளது என்கிறார். பாரீசில் அவர் வசித்துக்கொண்டிருக்கும்பொழுது மற்ற ஐரோப்பியர்கள் போலவே அவரும் இறைவனை வெளியில் தேடிக்கொண்டிருந்தார். அவரைப் போலவே இறையார்வம் கொண்ட இன்னொருவர் அவரைச் சந்தித்து இறைவனை வெளியில் தேடுவதற்குப் பதிலாக உள்ளே தேடவேண்டும் என்றார். இது அவருக்கு ஒரு விசேஷமான தகவலாகப்பட்டது. அந்நிமிடத்திலிருந்து அவர் ஒரு வருடத்திற்கு ஓர் இடையறா முயற்சியை எடுத்து, அவ்வருடத்தின் இறுதியில் தம் ஆன்மாவைச் சந்தித்ததாகச் சொல்கிறார். அவர் பிறவியிலேயே தெய்வீக அம்சம் கொண்டவர். ஆகையால் இரவு, பகல்என்று பார்க்காமல், தூக்கத்திலும்கூட இடைவிடாமல் அவரால் இறைச் சிந்தனையோடு இருக்க முடிந்துள்ளது. ஆனால் நம் போன்ற மானிடர்களால் இப்படி, தூக்கத்திலும்கூட இறைச் சிந்தனையை இழக்காமல் ஓர் இடையறா முயற்சி எடுக்க முடியுமாஎன்பது சந்தேகத்திற்குரியது. ‘அன்னை அழைப்பு’ என்று 12 மணி நேரத் தியானத்தை ஒரு நாள், இரு நாள், மூன்று நாள் மற்றும் ஐந்து நாட்கள்என்று தொடர்ச்சியாகச் செய்தவர்கள் உள்ளார்கள். அப்படிச் செய்தவர்கள் பல பேர் நிறைய ஆன்மீக அனுபவங்கள் கிடைத்ததாகச் சொல்லியிருக்கின்றனர். அந்தப் பல அனுபவங்களில் ஆன்மாவைச் சந்தித்ததும் ஓர் அனுபவமாக இருக்கலாம். அது உண்மையாக இருந்தால், அந்தச் சந்திப்பு அந்த ‘அழைப்பு’க் காலத்தில் மட்டும் நீடித்ததா? அல்லது அதன் பிறகும் தொடர்ந்ததா? என்ற விவரங்களைத் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லை. ஏனென்றால், இப்படிப்பட்ட ‘அழைப்பில்’ ஈடுபட்டவர்கள் தம்முடைய குருநாதரைத் தவிர வேறு எவரிடமும் இத்தகவலைப் பகிர்ந்துகொள்வதில்லை.

ஆன்மீக ஆர்வம் உள்ள சாதாரண மனிதருக்கு என்ன சாத்தியம் என்றால், ஓரளவு நீடித்த ஓர் ஆன்மீக ஆர்வத்தையும், சமர்ப்பணத்தையும் வளர்த்துக்கொள்ளலாம். அன்னை விரும்புகின்ற ஒரு வருட இடைவிடாத முயற்சிக்கு இது பல படிகள் கீழே இருந்தாலும், ஒரு பத்து வருடக் காலக்கட்டத்திலாவது ஆன்மாவை நெருங்குவதற்கு இம்முயற்சி உதவும்.

இந்த ஆன்மாவிற்கு ஆதரவான முயற்சி எடுக்கும்பொழுது, அதே சமயத்தில் ஆன்மாவிற்கு எதிராக செயல்படக்கூடிய நெகடிவ்வான குணவிசேஷங்களைக் களைந்து எடுக்கும் வேலையையும் செய்ய வேண்டும். இந்த நெகடிவ்வான குணவிசேஷங்களின் பட்டியலில் பொய் பேசுதல், பொறாமைப்படுதல், பேராசை, கோபம், சோம்பேறித்தனம், காமம் போன்ற பலவிதமான குணவிசேஷங்கள் அடங்கும். இந்தக் குணவிசேஷங்கள் விரும்பத்தகாதவைஎன்று தெரிந்தாலும், இவற்றிற்கு அடிமையானவர்கள் இவற்றை மிகவும் ரசிப்பதால், இவற்றை இவர்களே பொக்கிஷம்போலப் பாதுகாத்துக்கொள்கிறார்கள். இப்படி நம்முடைய தாழ்ந்த பர்சனாலிட்டி-யுடன் ஐக்கியமாகிவிடுவதால், அந்த அளவிற்கு நம்முடைய தாழ்ந்த பர்சனாலிட்டியும் வலுவடைந்து ஆன்மாவை நெருங்கும் வழியில் ஆன்மா-விற்கான கதவைத் திறக்கவிடாமல் பெரிய தடையாகச் செயல்படுகிறது. இம்மாதிரியான சூழ்நிலையில் நம்முடைய தாழ்ந்த சுபாவத்திலிருந்து விடுபடுவதற்குரிய பெரிய முயற்சி தேவைப்படுகிறது. இப்படி ஒருவர் தம்முடைய தாழ்ந்த மனநிலையிலிருந்து விடுபட்டுவிட்டார்என்றால், அதன் பின்னர் அந்தத் தாழ்ந்த சுபாவம் வலுவிழந்துவிடுகிறது. அதே சமயத்தில், அவருடைய இறையார்வத்தில் ஓர் உண்மையிருந்தால், அந்த உண்மையில் இருந்து கிடைக்கும் பலத்தை வைத்துக்கொண்டு சுலபமாக அவருடைய தாழ்ந்த சுபாவத்தை அவர் தம்முடைய பர்சனாலிட்டியிலிருந்து வெளியேற்றலாம். ஆனால், தாழ்ந்த சுபாவத்தின்மேல் நமக்கு இருக்கும் மோகத்தை விடுவதுதான் நமக்கு மிகவும் கடினமாக இருக்கிறது. எருமை சேற்றில் புரள்வதை ரசிப்பதுபோல நாம் நம்முடைய தாழ்ந்த சுபாவத்தின் செயல்பாடுகளை ரசிக்கின்றோம். எருமையின் சொந்தக்காரருக்கு எருமை சேற்றில் புரள்வது அருவருப்பாகத் தெரிகிறது. ஆனால் எருமைக்கு அப்படித் தெரியவில்லை. அதற்குச் சேறும், சகதியும் தெய்வீகமாக இருக்கிறது. சேற்றில் புரள்வது சரியில்லைஎன்று எருமைக்கு உணர்த்தி, அதைச் சேற்றில் இருந்து வெளியேற்றி, நல்ல தண்ணீர் உள்ள இடமாகக் கொண்டுசெல்வது எருமையின் சொந்தக்காரருக்கு ஒரு கடினமான வேலையாகும். அறிவுறுத்தாமல் பலவந்தமாக எருமையின் கழுத்திலுள்ள கயிற்றைப் பிடித்து இழுத்து, அவ்வகையில் சகதியை விட்டு வெளியேற்றி, நல்ல தண்ணீர் உள்ள இடத்திற்கு எருமையின் உரிமையாளர் அழைத்துப் போனால்தான் உண்டு. அப்படியே நல்ல தண்ணீர் உள்ள இடத்திற்குப் போனாலும், எருமை அதில் இறங்குமாஎன்பது சந்தேகம்தான். கடைசி நேரத்தில் திமிறிக் கொண்டு உரிமையாளர் பிடியிலிருந்து விடுபட்டு, பழைய சகதிக்கே அது திரும்பி வரலாம்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் நாம் இருக்கிறோம். நம்முடைய உயர்ந்த சுபாவம் எருமையின் உரிமையாளருக்குச் சமம். நாம்தான் எருமை. நம் தாழ்ந்த சுபாவம்தான் எருமை புரளும் சகதி. எருமை சகதியை நாடுவதைப் போல் நாம் நம் தாழ்ந்த சுபாவத்தில் திளைக்கிறோம். சேறு தன்னை அழுக்காக்குகிறதுஎன்பது எருமைக்குப் புரிவதில்லைஎன்பதைப்போல, தாழ்ந்த சுபாவத்தைவிட வேண்டும்என்பது நமக்கு உரைப்பதில்லை. எருமைக்கும், சகதிக்கும் என்ன ஐக்கியம் இருக்கிறது? அதே ஐக்கியம் நமக்கும், நம் தாழ்ந்த சுபாவத்திற்கும் இருக்கிறது. எருமையைச் சேற்றிலிருந்து பலவந்தமாக இழுக்கின்ற உரிமையாவது எருமையின் சொந்தக்காரருக்கு இருக்கிறது. ஆனால், நம் தாழ்ந்த சுபாவத்தில் இருந்து நம்மைப் பலவந்தமாக விடுவிக்கும் உரிமை நம்முடைய உயர்ந்த சுபாவத்திற்குக் கிடையாது. அது எட்ட நின்று நாமாக நம் தாழ்ந்த சுபாவத்திலிருந்து விடுபட்டு, அதனை நோக்கி நாடி வரும்வரை காத்திருக்கும் உரிமைதான் இருக்கிறது. மற்றபடி வேறு எந்த உரிமையும் அதற்கில்லை.

நம்முடைய பர்சனாலிட்டியில் மிகஉயர்ந்த பாகமாக விளங்குவது நம்முடைய ஆன்மாதான். ஆனால், அந்த உயர்வைக் காரணமாக வைத்து நம் பர்சனாலிட்டியின் மற்ற அம்சங்களின் மேல் தன்னுடைய அதிகாரத்தைச் செலுத்தாமல் அது அடங்கியிருப்பது இயற்கையில் நமக்கு விளங்காத பெரிய புதிராக இன்னமும் இருக்கிறது. ஆனால், நம்முடைய தாழ்ந்த சுபாவமோ தன் அதிகாரத்தை மிகவும் வலியுறுத்துகிறது. நம் தாழ்ந்த சுபாவத்திற்கு நாம் அடிமைப்பட்டிருப்பதால் நமக்கு ஓர் உயர்ந்த அம்சம் இருக்கிறது என்பதையே நாம் மறந்த நிலையில் இருக்கிறோம். தாழ்ந்த சுபாவத்தின் பிடியைத் தளர்த்தி, நம் உயர்ந்த சுபாவம் வலுவடைந்து, நம் பர்சனாலிட்டியை நம் ஆன்மாவே ஆட்சி செய்ய வேண்டும்என்ற நிலைமைக்கு மாற வேண்டும்என்றால், சத்தியஜீவிய சக்தி நம்

ஆன்மாவிற்குப் பக்கபலமாக நம் உடம்பிற்குள் இறங்க வேண்டும். சத்திய ஜீவியம் நம் ஆன்மாவுடன் இயற்கையாக ஒத்துழைக்கக்கூடியது. ஆகவே, அதனுடைய ஆதரவு கிடைக்கும்பட்சத்தில் இதயக் குகையிலிருந்து கண்டிப்பாக வெளிவருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. சச்சிதானந்தத்தின் புறவடிவம்தான் சத்தியஜீவியம்என்பது பகவானுடைய கூற்று. சத்திய ஜீவியம் அனந்தமானது; உண்மையானது; ஜீவியம் நிறைந்தது. அதனுடைய அனந்தம் சச்சிதானந்தத்தின் ஆனந்தத்திலிருந்து வருகிறது; உண்மை சத்திலிருந்து வருகிறது; ஜீவியம் சித்திலிருந்து வருகிறது. நம்முடைய ஆன்மாவும் ஆனந்தத்தில் இருந்துதான் பிறக்கிறது. ஆனந்தத்தின் பிரதிநிதியாகத்தான் நம்முடைய ஜீவனிலும் அது உறைகிறது. சத்திய ஜீவியமும், ஆன்மாவும் சமநிலையில் இருப்பதால் ஒன்றுக்கொன்று ஆதரவாக இருப்பதில் ஆச்சரியமில்லை.

அன்னை தம்முடைய பூரணயோகத்தைச் செய்துகொண்டிருந்த பொழுது சத்தியஜீவிய மனிதன் உருவாகும்பொழுது, அவனுடைய உடம்பு எப்படி இருக்கும்? எதை வைத்து அது உருவாகும்? என்ற கேள்விகள் அவருக்கு எழுந்தவண்ணம் இருந்தன. பிறகு ஒரு நாள் ஒரு பெண் சாதகி அன்னை முன் நமஸ்கரிக்கும்பொழுது அவளுடைய ஆன்மா திடவடிவம் பெற்று அவளுடைய உடம்பிலிருந்து வெளிவந்து அன்னைமுன் நின்றது. அதைக் கவனித்த அன்னைக்கு உடனே விஷயம் புரிந்துவிட்டது. அதாவது நம் மானிட உடம்பில் சத்தியஜீவியம் முழுமையாக இறங்கிவிட்ட பிறகு நம்முடைய ஆன்மாவே திடவடிவம் பெற்று சத்தியஜீவனாக வெளிவரும் என்று அவருக்குப் புரிந்தது. இதை அவர் தம்முடைய அஜெண்டாவில் விவரித்துள்ளார். இதை வைத்துப் பார்க்கும்பொழுது நம்முடைய சைத்தியப் புருஷன் வெளிவருவதற்கு சத்தியஜீவியத்தினுடைய ஆதரவு மிகவும் தேவைப்படுகிறதுஎன்பது தெரிகிறது. நம்முடைய ஆன்மாவை வெளிக்கொண்டுவருவதற்கு சத்தியஜீவியத்தின் துணையை நாடுவதுஎன்பது அவ்வளவு எளிதான காரியம் இல்லை. நிறைய அன்பர்களுக்கு சத்திய ஜீவியம்என்பது வெறும் வார்த்தைதான். புரட்சிகரமான விஞ்ஞானக் கருத்துகளைப் பற்றிச் சாதாரண மனிதனுக்கு ஒன்றுமே தெரிவதில்லை என்பதுபோலச் சாதாரண அன்பர்களுக்கு



சத்தியஜீவியத்தைப் பற்றி ஒன்றும் தெரிவதில்லை. ஆகவே சத்தியஜீவியத்திற்கு அடுத்தபடியாக நமக்குச் சுலபமாகக் கிடைக்கக்கூடிய மற்ற ஆதாரங்களை நாம் கருதலாம். பகவான் தம்முடைய ஆன்மீகச் சிந்தனைகளில், அன்பையும், தைரியத்தையும் துணையாக வைத்துக் கொண்டு ஆழத்தில் அமுங்கி இருக்கும் ஆன்மாவை நாம் வெளியே கொண்டுவரலாம் என்கிறார். இங்கே பகவான் குறிப்பிடுகின்ற அன்பு மனிதன் இறைவன் மேல் காட்டும் அன்பாகும். ஆகவே நம்முடைய இறையன்பை அதிகப்படுத்தும் அளவிற்கு நம்முடைய ஆன்மாவிடம் தொடர்பு கிடைக்கும்என்று தெரிகிறது. இங்கே அவர் தைரியம்என்று குறிப்பிடுவது உலகில் உண்மையை நிலைநாட்ட பொய்யை எதிர்த்துப் போராடுவதற்குத் தேவையான தைரியமாகும்.

ஆகவே இந்த விஷயத்தில் நாம் தைரியத்தை அதிகப்படுத்தினால், அந்த அளவிற்கு ஆன்மாவுடன் தொடர்பு அதிகரிக்கும்என்று தெரிகிறது.

கேள்வி-பதில் தொகுப்புகளில் அன்னை ஓர் இடத்தில், 'புன்முறுவல் இருக்கும் இடத்தில் எல்லாம் தெய்வம் இருக்கிறது' என்று குறிப்பிட்டுள்ளார். இதன்படி பார்க்கும்பொழுது நம் மனநிலையை நாம் எந்நேரமும் சந்தோஷமாக வைத்துக்கொண்டோம்என்றால், நமக்கு நடக்கும் எந்த ஒரு நிகழ்ச்சியையும் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டோம்என்றால், அந்த அளவுக்கு நம்முடைய ஆன்மாவுடன் தொடர்பு அதிகரிக்கும்என்று தெரிகிறது. ஆனால், அகந்தையின் பிடியில் இருக்கும்வரை நம்மால் எந்த ஒரு முயற்சியும் எடுக்க முடியாது. ஆனால், இதையே காரணமாகக் கூறிக்கொண்டு எந்த ஒரு முயற்சியும் எடுக்காமலும் இருக்கக்கூடாது. எந்த அளவிற்கு எல்லா அனுபவங்களையும் இன்பகரமாக எடுத்துக் கொள்கிறோமோ அந்த அளவுக்கு அகந்தையின் பிடியில் இருந்து விடுபடுவோம்என்றும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். ஆகவே இந்தத் திசையில் நாம் உடனடியாக முயற்சிகளை எடுக்க வேண்டும். படிப்படியாக முயற்சிகளைத் தீவிரப்படுத்தினால், ஒரு கட்டத்தில் அகந்தையின் ஆட்சி நிலைகுலையும் அளவுக்கு ஒரு மாற்றம் வரும்.

மேலும், ஆன்மாவை வெளிக்கொண்டு வருவதற்கு நன்றியறிதல்,

பணிவு போன்ற குணவிசேஷங்களும் மிகவும் உதவுகின்றது. நம்முடைய ஆன்மா எந்நேரமும் இறைவனைப் போற்றிக்கொண்டிருக்கிறது. நாமும் அன்னை நமக்கு இதுவரை செய்த நல்லனவற்றிற்கெல்லாம் அவருக்கு எந்நேரமும் நன்றி சொல்லிக்கொண்டிருந்தால், அந்த வகையில் நமக்கும் நம் ஆன்மாவுக்கும் ஒரு நல்ல அலைன்மென்ட் கிடைக்கும். இந்த நன்றியறிதலோடு பணிவும் சேர்ந்துகொள்கின்றபொழுது நம்முடைய முயற்சி மேலும் வலுப்பெறுகிறது. இறைவன் இவ்வளவு பிரம்மாண்டமான படைப்பை நிகழ்த்திய பிறகும் தன்னுடைய சாதனையைப் பற்றி தானே பெருமைப்பட்டுக்கொள்வதில்லை. அவருடைய படைப்பைப் பாராட்டி நாம் அவருக்குப் புகழாரம் சூட்ட வேண்டும்என்று ஏங்கிக்கொண்டும் இருப்பது இல்லை. நாம் கண்ணாடிமுன் நின்றுகொண்டு நம் அழகையே நாம் எத்தனை முறை ரசித்துக்கொள்கிறோம். இது நம் அழகை நாமே பாராட்டிக்கொள்வதற்குச் சமம். படைப்புஎன்பது இறைவனுடைய படைப்பு ஆற்றலுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்ற கண்ணாடியாகும். அவர் விரும்பினால் இந்தப் படைப்பென்ற கண்ணாடிமுன் நின்று அவருடைய சாதனையை அவரே புகழ்ந்துகொள்ளலாம். ஆனால் இந்த வேலையை அவர் செய்வதில்லை. இது அவருடைய அடக்கத்தினுடைய உச்சக்-கட்டத்தைக் காட்டுகிறது. அவருடைய சாதனையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நம்முடைய சாதனை ஒன்றுமேயில்லை. ஆகவே, நம்முடைய சாதனைகளை அறவே மறந்துவிட்டு, இரு கை கூப்பி, நாம் அவர்முன் நின்றால், அப்பட்சத்தில் நம் ஆன்மாவுடன் நல்ல அலைன்மெண்ட் கிடைக்கும். இந்தப் பணிவிற்கு ரெஸ்பான்ஸ் தரும் வகையில் நம் ஆன்மாவும் விரைவில் வெளிவந்து அதனுடைய அன்பு, ஆனந்தம், இனிமை ஆகியவற்றால் நம்மைச் சூழ்ந்து கொள்ளும்.

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**தொடர்ந்து தரிசனம் கிடைத்தால்**

**அழைப்பையும் மனம் மறந்துவிடும்.**



# இம்மாதச் செய்தி

**ஞானம்**

**புத்தகத்திலில்லை;**

**மனத்திலுள்ளது.**

## லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி....)

கர்மயோகி

## XVI. The Triple Status of Supermind

Page No.143
Para No.3

We assert Unity of Sachchidananda.
On the other hand is this divided mentality.
They are two opposite entities.
One of which must be false.
The other may be true.
One of them should be abolished.
Then the other may be true.
Then the other may be enjoyed.
We exist on earth.
It is in the mind we live.
Life is a form of the mind.
Body is another form of mind.
We live in all of them.
We may abolish mind, life and body.
It may take us to Existence, Consciousness and Bliss.
Then no divine life is possible on earth.
We are from the Transcendent.
We live in the cosmos.



## 16. சத்தியஜீவியத்தின் மூன்று கட்டங்கள்

சச்சிதானந்த ஐக்கியத்தை நாம் வலியுறுத்துகிறோம்.
எதிராகப் பிரிக்கும் மனித மனோபாவம் உண்டு.
இரண்டும் எதிரெதிரானவை.
ஒன்று பொய்யாக இருக்க வேண்டும்.
அடுத்தது உண்மையாக இருக்கும்.
ஒன்றை அழிக்க வேண்டும்.
அது அழிந்தபின் அடுத்தது உண்மையாக எழும்.
அப்பொழுது அடுத்ததை அனுபவிக்கலாம்.
நாம் புவியில் வாழ்கிறோம்.
நாம் மனம்என்ற லோகத்தில் வாழ்கிறோம்.
வாழ்வு மனத்தின் அரங்கம்.
உடல் மனத்தின் மற்றோர் உருவம்.
நாம் இவற்றுள் வாழ்கிறோம்.
நாம் மனம், உயிர், உடலை அழிக்கலாம்.
இவை நம்மை சத், சித், ஆனந்தத்திற்கு அழைத்துச் செல்லலாம்.
அப்பொழுது உலகில் தெய்வீக வாழ்வில்லை.
நாம் இறைவனிலிருந்து வருகிறோம்.
நாம் பிரபஞ்சத்தில் வாழ்கிறோம்.

We must abolish cosmic life.
That enables us to re-become the Transcendent.
This solution is inescapable.
If an intermediary link exists, we can escape it.
It can explain each to the other.
Then the higher can be realised in the lower.
Existence, Consciousness and Delight can then be realised in mind, life and body.

The intermediate link exists. Page No.143
We call it the Truth-Consciousness. Para No.4
Its other name is Supermind.
It is a principle superior to mentality.
It exists, acts in the fundamental truth.
It does so in the unity of things.
It does not proceed like the mind.
Mind acts on appearances.
It does so by phenomenal divisions.
We started with a premise.
It compels the creation of the Supermind.
To that premise, it is a logical necessity.
Sachchidananda is spaceless and timeless.
It is absolute conscious existence of bliss.
The world is its contrary.
It is an extension in Time and Space.
It is a movement, a working out.
It is a development of relations.
It develops possibilities by causality in Time and Space.
At least, it appears so.
Causality has a true name.



நாம் பிரபஞ்ச வாழ்வை அழிக்க வேண்டும்.
அதன் மூலம் நாம் மீண்டும் இறைவனாகலாம்.
இது தவிர்க்க முடியாதது.
இடைப்பட்ட நிலையென ஒன்றிருந்தால், இதனின்று தப்பலாம்.
அது ஒன்றை மற்றதற்கு எடுத்துரைக்கும்.
அப்பொழுது தாழ்ந்த நம்முலகில் உயர்ந்தது பலிக்கும்.
சத், சித், ஆனந்தம் அங்ஙனம் மனம், உயிர், உடலில் பலிக்கும்.

இடைநிலை இருக்கிறது.
அதை சத்தியத்தின் ஜீவியம் என்போம்.
அதை சத்தியஜீவியம் என்போம்.
அது மனப்போக்கைவிட உயர்ந்தது.
அடிப்படையான சத்தியத்திலிருந்து அது செயல்படுகிறது.
அது ஐக்கியத்தினின்று செயல்படும்.
அது மனம்போல் நடப்பதில்லை.
மனம் தோற்றத்தைக் கண்டு செயல்படும்.
தோற்றம் பிரிக்கிறது. அதையே மனம் உண்மையாகக் கொள்கிறது.
நாம் ஓர் அடிப்படைக் கொள்கையுடன் ஆரம்பித்தோம்.
அது சத்தியஜீவியம் உண்டுஎனக் கூறுகிறது.
அப்படிக் கூறும் அவசியம் ஏற்படுகிறது.
சச்சிதானந்தம் காலத்தைக் கடந்த அனந்தம்.
அது தன்னையறியும் பிரம்மமான பிரபஞ்ச வாழ்வின் ஆனந்தம்.
உலகம் அதற்கெதிரானது.
காலத்தாலும், இடத்தாலும் உலகம் இயங்குகிறது.
அது சலனம்; தன் செயலால் வெளிப்படும் சலனம்.
அது - உலகம் - உறவால் ஏற்படும் உருவகம்.
காலத்துள் ஏற்படுத்தும் வாய்ப்புகளின் காரண-காரியம் அதன் சிருஷ்டி.
வாழ்வு அப்படிப்பட்ட தோற்றத்தைத் தாங்கி நிற்கிறது.
காரண-காரியத்திற்கு உண்டான உண்மையான பெயருண்டு.

It is Divine Law.
The law has an essence.
It is an inevitable self-development of the truth.

It is the truth of the thing.
It is idea.
It is the very essence of what is developed.
There is the infinite possibility.
There is the relative movement out of that stuff.
What develops thus is Knowledge-Will.
Or it is Consciousness-Force.
All manifestation is a play.
It is a play of Consciousness-Force.
It is the essential nature of its essence.
The Knowledge-Will develops.
It cannot be mental.
The mind does not know that Law.
Nor does it possess it.
Indeed, it is possessed by that Law.
And it is governed by it.
It is one of the results.
It moves in the phenomena of self-development.
It does not move at its root.
It observes as divided things.
To it the results of development are divided.
It strives in vain to arrive at the root of things.
The root is the source and reality.
This Knowledge-Will develops all.
It must be in possession of the unity of things.
It must manifest the multiplicity out of that unity.



அது தெய்வீக நியதி.
அச்சட்டத்திற்குச் சாரம் உண்டு.
சத்தியம் தவிர்க்க முடியாமல் தன்னை வளர்ப்பதால் எழும் நிலை தெய்வீக நியதி.
அது விஷயத்தின் சத்தியம்.
அது எண்ணம்.
வளர்ந்து எழுந்ததின் வண்ணச்சாரம் அது.
இவ்வாய்ப்புகள் அனந்தம்.
வாழ்வுஎன்ற விஷயத்தினின்று உறவான அசைவின் உற்பத்தி அது.
அப்படி எழுவது ஞான-உறுதி.
அல்லது ஜீவிய-சக்தி.
சிருஷ்டி லீலை.
அது ஜீவிய-சக்தியின் லீலை.
அது சாரமான சுபாவத்தின் சுருக்கம்.
ஞான-உறுதி வளர்கிறது.
அது மனத்துடையதன்று.
மனம் அறியாத சட்டமது.
அது மனத்திற்குச் சொந்தமாகாது.
கவனித்துப் பார்த்தால் மனத்தை இச்சட்டம் ஆள்கிறது.
இந்தச் சட்டத்தின் ஆட்சிக்குட்பட்டது மனம்.
இது அதனால் எழும் பலன்களில் ஒன்று.
தானே மலர்வதின் தோற்றத்தில் அது உறையும்.
அது வேரான ஆழத்தைத் தொடாது.
உலகை அது பலப்பலப் பொருள்களாகப் பார்க்கிறது.
அதற்கு இந்த வளரும் மாற்றம் பிரிந்து நிற்கும் பிரகிருதியாகும்.
ஆழத்தில் வேரைத் தொட அது முயல்வது பலன் தராது.
ஆழம் வேர்; அதுவே உற்பத்தி ஸ்தானமான சத்தியம்.
இந்த ஞான-உறுதி அனைத்தையும் சிருஷ்டிக்கிறது.
இதற்குப் பொருள்களின் ஐக்கியம் உண்டு.
ஐக்கியத்தினின்று எழும் அனந்தத்தை அது வெளிப்படுத்தும்.

But, Mind is not in possession of that unity.
Its possession is imperfect.
It possesses a part of the multiplicity.

Mind fails in these conditions. Page No.144
Something else can succeed when mind fails. Para No.5
Such a one is there.
It is Supermind.
That principle is Sachchidananda.
But Sachchidananda has two poises.
In one it rests in its pure infinite invariable Consciousness.
Another proceeds out of its primal status.
It is a form of Energy.
It is an instrument of cosmic creation.
This bases upon the first.
This is in the first as a continent.
Consciousness is an essential aspect of power.
It is a pure power of existence.
Force is another such.
Those Powers take the form of Knowledge and Will.
They create the world of relations.
That world is in the extension of Time and Space.
This Knowledge and this Will must be one.
They are infinite, all-embracing, all possessing.

It is all forming.
It holds what it casts into movement and form.

It holds them eternally.
Then the Supermind is Being.



மனத்திற்கு அவ்வைக்கியம் கட்டுப்படாது.
மனம் அதை ஆள முயல்வது முடிவதில்லை.
பலவான உலகின் பகுதியே அதன் உரிமை.

இந்த நிலையில் மனம் வேலை செய்யாது.
மனம் தவறுமிடத்தில் மற்றது ஜெயிக்கும்.
அப்படிப்பட்டதுள்ளது.
அது சத்தியஜீவியம்.
அது சச்சிதானந்த தத்துவம்.
ஆனால் சச்சிதானந்தத்திற்கு இரு நிலைகள் உள்ளன.
தூய்மையான, ஆனந்தமான, மாற்றமற்ற ஜீவியத்திலுறைவது ஒன்று.
அடுத்தது அந்த முதல் நிலையினின்று எழுவது.
இது சக்தி ரூபம்.
இது பிரபஞ்ச சிருஷ்டியின் கருவி.
இது முந்தையதின் அடிப்படையிலுறைவது.
இது முந்தையதினுள் அடங்கியது.
ஜீவியம் சக்தியின் முக்கிய அம்சம்.
பிரபஞ்ச வாழ்வின் தூய்மையான சக்தியது.
சக்தி அப்படிப்பட்ட ஒன்று.
அந்த சக்திகள் ஞானம், உறுதிஎன்ற ரூபங்களை ஏற்கும்.
உறவாலான உலகை அவை சிருஷ்டிக்கின்றன.
அவ்வுலகம் காலம், இடமென்ற நீட்சியாலானது.
இந்த ஞான-உறுதி ஒன்றேயாகும்.
அவை அனந்தம்; அனைத்தையும் தழுவுவது; அனைத்தையும் ஆட்சி செய்வது.
இது அனைத்தையும் உருவகப்படுத்துவது.
உருவமளித்து, சலனமாக வெளிப்படுத்துபவை அனைத்தையும் அதுவே தாங்கும்.
அப்படி காலத்திற்கும் அது செயல்பட வல்லது.
எனவே சத்தியஜீவியம்என்பது புருஷன்.

It is Being moving into determinative self-knowledge.
It perceives certain truths of itself.
It wills to realise them.
It does so in a temporal spatial extension.
It is its own timeless, spaceless existence.
What takes form is in its own being.
It does so as self-knowledge.
It is Truth-Consciousness.
It is Real-idea.
That self-knowledge is also its self-force.
It fulfills or realises itself.
It is so inevitably in Time and Space.

Page No.144
Para No.6

This, then, is the nature of the Divine Consciousness.
It creates in itself all things.
It does so by a movement of its conscious-force.
It governs their development.
It is done by self-evolution.
The inherent knowledge-will does it.
It is the truth of existence.
Or, it is called real-idea.
It is real-idea that formed them.
A Being is thus Conscient.
It is what we call God.
He is obviously omnipresent.
He is omniscient and omnipotent too.
All forms are forms of His Conscious Being.
They are created by its force of movement.
That movement is in its own extension.
That extension is called Space and Time.



புருஷன் உலகை நிர்ணயிக்கும் சுய-ஞானம் பெறுவது சத்தியஜீவியம்.
அதன் சத்தியத்துள் சிலவற்றை அது கண்ணுறும்.
அவற்றைச் சித்திக்க முயலும்.
காலத்திலும், இடத்திலும் சித்திப்பது நோக்கம்.
அது அதனுடைய நீட்சி; காலத்திலும் இடத்திலும் உள்ள நீட்சி.
உருவகம் பெறுவது அதனுடைய ஜீவனில் உண்டாகிறது.
அது சுய-ஞானத்தால் அப்படிச் செய்கிறது.
அது சத்தியஜீவியம்.
அது முழு எண்ணம்.
சுய ஞானம் சுய சக்தி.
அது தன்னைப் பூர்த்தி செய்து சித்தி பெறுகிறது.
அது தவிர்க்க முடியாதபடி காலம்-இடத்தில் செயல்படுகிறது.

இதுவே தெய்வீக ஜீவியத்தின் சுபாவமாகும்.
அது தன்னுள் அனைத்தையும் சிருஷ்டிக்கிறது.
தன் சித்-சக்தியின் அசைவால் அதை அது செய்கிறது.
அவற்றின் வளர்ச்சியை அது ஆள்கிறது.
சுய பரிணாமத்தால் அதை அது செய்கிறது.
பிறப்பில் உள்ள ஞான-உறுதியால் அதைச் செய்கிறது.
அதுவே பிரபஞ்ச வாழ்வின் சத்தியமாகும்.
அல்லது அதை முழு-எண்ணம் எனலாம்.
முழு எண்ணமே அவற்றை உருவகப்படுத்தியது.
ஜீவன் அவ்வகையாகத் தன்னையறியும்.
நாம் கடவுள்என்பது அதுவே.
கடவுள் எங்கும் நிறைந்தவர்எனத் தெளிவாகத் தெரிகிறது.
கடவுள் எல்லாம் அறிந்தவர்; எல்லாம் வல்லவர்.
எல்லா ரூபங்களும் அவருடைய தன்னையறியும் ஜீவனின் ரூபங்கள்.
சக்தியின் சலனத்தால் அவை சிருஷ்டிக்கப்பட்டன.
சலனம்என்பது அதன் சொந்த நீட்சியே.
இந்த நீட்சிக்குக் காலம், இடம்எனப் பெயர்.

Therefore He is omnipotent.
All things exist in His Conscious Being.
They are formed by it.
They are possessed by it.
Therefore He is omniscient.
This is all-possessing consciousness.
It is also all-possessing Force.
It is an all-informing Will.
Our Will and Knowledge are at war.
Supramental Will and Knowledge are not at war.
They are not different.
They are one movement.
They are of the same being.
It cannot be contradicted by other wills.
Nor force or consciousness from outside can contradict this will.
All energies are not other than that.
Even formation of knowledge is so.
They are merely the play of the one all-determining Will.
It is the all-harmonising Knowledge.
We dwell in the particular.
It is divided.
We cannot see the whole.
We, therefore, see a clash of Wills and forces.
The Supermind envisages them differently.
To it, there is a predetermined harmony.
It is always present to it.
It is not the conspiring elements.
It is a totality of things.
They are eternally subject to their gaze.

*Contd....*

❀❀❀



எனவே அவர் எல்லாம் வல்லவர்.
எல்லாம் அவர் தன்னையறியும் ஜீவனில் உள்ளன.
அவற்றை உருவகப்படுத்தியது அதுவே.
அவற்றை அது தன்னுள் கொண்டது.
எனவே அவர் எல்லாம் அறிந்தவர்.
இது அனைத்தையும் உட்கொண்ட ஜீவியம்.
மேலும் இது அனைத்தையும் உட்கொண்ட சக்தி.
அனைத்துக்கும் அறிவுறுத்தும் உறுதியது.
நம் ஞானமும், உறுதியும் மோதுகின்றன.
சத்தியஜீவிய ஞானமும், உறுதியும் மோதுவதில்லை.
அவை மாறுபட்டவையல்ல.
அவை ஒன்றுபோல் இயங்குபவை.
அவை ஒரே ஜீவனுக்குரியவை.
மற்றவரால் அதை எதிர்க்க முடியாது.
எந்த சக்தியும், ஜீவியமும் வெளியிலிருந்து வந்து அதை மறுக்க முடியாது.
எல்லா சக்திகளும் அது தவிர வேறில்லை.
ஞானத்தின் உருவகங்களும் அப்படிப்பட்டவை.
அத்தனையும் எல்லாவற்றையும் நிர்ணயிக்கும் ஒரே உறுதியின் லீலையாகும்.
அனைத்தையும் சுமுகமாக்கும் ஞானம் அது.
நாம் குறிப்பிட்டதிலிருக்கிறோம்.
அது துண்டு, துண்டாக உள்ளது.
நம்மால் முழுமையைக் காண முடியாது.
எனவே உறுதியும், சக்தியும் மோதுவதைக் காண்கிறோம்.
சத்தியஜீவியம் அவற்றை வேறு வகையாகக் காண்கிறது.
அதன் சுமுகம் முன்கூட்டி நிர்ணயிக்கப்பட்டது.
அதற்கு அச்சுமுகம் எப்பொழுதும் தெரியும்.
இவை சதி செய்யும் சக்திகளில்லை.
அது பொருள்களின் முழுமை.
அதன் பார்வைக்கு அவை என்றும் புலப்படும்.

*தொடரும்.....*

❀❀❀

# முடிந்ததை முழுமையாக முடிப்பது முக்கியமான முறை

கர்மயோகி

✡ **மனிதன் முடிக்குமிடத்தில் அன்னை ஆரம்பிக்கிறார்.**
**மனிதனும் தெய்வமும் ஒரே வாழ்வின் இரு முனைகள்.**

✡ **தவத்தை ஏற்றுகொள்ள முடியாத மனிதனுக்கு வழிபாடு உண்டு.**

**தன்னால் முடியும்வரை மனிதன் ஆண்டவன் உட்பட எவரையும் நினைக்க மாட்டான்.**

**முடியாதபொழுது உதவியை நாடுவான்.**

**எவரும் உதவ முடியாத நிலையில் ஆண்டவனை நினைப்பான்.**

முழுவதும் முடியும் நேரத்திலும் ஆண்டவனை அழைப்பவன் பக்தன்.

தன்மானமுள்ளவன் தானே முயன்று பெறாததை மறுத்துவிடுவான்.

அன்னை மூலம் வருவது நமக்குரியது; வேறு எந்த வகையாக வருவதும் எனக்குத் தேவையில்லையென்பவன் தீவிர அன்னை பக்தன்.

**பொதுவாக அன்பர்கள் அன்னையின் பெயரை உச்சரித்தவண்ணம் இருப்பார்கள்.**

**"முருகா", "ராமா", "கோவிந்தா" என்றவர் இன்று "மதர்", "அன்னை", "பகவான்", "ஸ்ரீ அரவிந்தர்" என்று கூறுகிறார்.**

**இந்த உச்சாடனம் தரும் பலன் பெரியது.**

**இது முடியாதவர் பலர்.**

வாயால் சொல்லும் வார்த்தையை மனதால் கூறினால் பலன் அதிகம்.

வாயால் சொல்வது முழுமை பெறும் நேரம் மனம் சொல்ல ஆரம்பிப்பதைக் காணலாம்.

ஒரு நிலை முடிந்தால், அடுத்தது தானே ஆரம்பிக்கும்.

**அன்னையைப் பற்றி விவரமாகப் படித்து, விளக்கமாகக் கேட்டபின்,**

**"இதெல்லாம் என்னால் முடியாதே" என நினைப்பவருண்டு.**



**இந்த நினைவு பலருக்கும் எழுவதுண்டு.**

**அவரும் தன்னால் முடிந்ததைச் செய்யலாம்.**

**'எண்ணத்தைக் கட்டுப்படுத்து' என்றால் முடியாதவர், 'எதையாவது கையால் செய்யச் சொன்னால் செய்யலாம்; எண்ணம் எனக்குக் கட்டுப்படாது' என்றால், அவர் கையால் செய்யும் காரியம் ஒன்றை - சுத்தம் செய்வதை - மேற்கொள்ளலாம்.**

என்னால் முடியவில்லை என்பது, எனக்குப் பிடிக்கவில்லை என்பதி-னின்று வேறுபட்டது. முடியவில்லையென்பவருக்கு வழியுண்டு; பிடிக்காத-வருக்கு நேரம் வரும்வரை காத்திருக்க வேண்டும்.

**சுத்தத்தை மேற்கொள்பவர் ஓரளவு செய்யலாம்.**

**ஓரளவு செய்வது அரைகுறையாகச் செய்வது.**

***அரைகுறையாகச் செய்வதை முழுமையாகச் செய்வது முறை.***

**முழுமையாகச் செய்வதுஎனில், அக்காரியம் பூர்த்தியாகும்வரை செய்வது எனப் பொருள்.**

**அப்படி வேலை முடிந்தபின் ½ மணி நேரம் மீதியிருந்தால், நம் சக்தி முழுவதும் செலவாகும்வரை செய்து முடிப்பது இம்முறையின் இரண்டாம் கட்டம்.**

அன்னைக்குரிய முறை சமர்ப்பணம். சமர்ப்பணம் பூர்த்தியானால், சரணாகதி எழுந்து தன்னைப் பூர்த்தி செய்துகொள்ளும்.

**அன்னையிடம் கூறுவது பிரச்சினைக்குரிய சமர்ப்பணம்.**

**சமர்ப்பணத்திற்குரிய முறை எண்ணம் எழுந்தவுடன் அன்னைக்குக் கூறுவது.**

**கூறியது சரியானால், அந்த எண்ணம் நம் மனத்தைவிட்டகல வேண்டும்.**

**அதற்குள்ள பாரம் விலக வேண்டும்.**

**நாம் உணர்ச்சியை எண்ணமாக அறிவோம்.**

**உணர்ச்சியை, எண்ணத்தினின்று பிரித்துப் பார்க்க வேண்டும்.**

**எண்ணம் மனதில் - தலையில் - உதிப்பது.**

**உணர்ச்சி வயிற்றைப் புரட்டுவது.**

**பிரித்துப் பார்ப்பது எளிது.**

சொல்லாக உருவாகி, பேச்சாக வாய்வழிப் பேசுவது எண்ணம்.

**எண்ணம் தலையில் உருவாவதைக் கவனித்தால் தெரியும்.**

**இந்த எண்ணம் எழுந்தவுடன், அதை உருவம்பெற இடம் தாராமல் சமர்ப்பணம் செய்வது மிகச்சிரமமான காரியம்.**

**நாம் சமர்ப்பணம் செய்ய முயலும்பொழுது, அதைப் பொருட்படுத்தாமல் எண்ணம் முழுஉருவம் பெற்று, வாய்வழி பேச்சாக வெளிவரும்.**

**செயலாகவும் மாறும்.**

**இதைச் சுபாவம்என நாம் அறிவோம். முயல்பவர் குறைவு; இல்லை எனலாம்.**

**முயன்றால் முடியாதுஎனக் கைவிடுவர்.**

இப்படி எழுவது ஜடமான எண்ணம். சூட்சுமமான எண்ணம் இதைக் கடந்தது. ஜடமான எண்ணம் தெளிவாக, மெதுவாக உருவம் பெறும். சூட்சும எண்ணம் மின்னல் தெறிப்பதுபோல் தோன்றி மறையும்.

✡ **விரைவாக எழுவதால் பிடிபடாது.**

✡ **பிடிபட்டால் ஒரு முறை சமர்ப்பணம் செய்தால் காரியம் முடியும்.**

✡ **ஜடமான எண்ணம் சமர்ப்பணமாகும்வரை சூட்சுமம் கட்டுப்படாது.**

✡ **ஜடமான எண்ணம் சமர்ப்பணமாக உஷாராக இருக்க வேண்டும்.**

✡ **மனிதன் வாழ்க்கையை அனுபவிக்க எவ்வளவு உஷாராக இருக்கிறானோ, அவ்வளவு உஷாராக இருந்தால் சமர்ப்பணம் முடியும்.**

✡ **வாழ்க்கை யோகவாழ்க்கையாகமாற எண்ணம் சமர்ப்பணமாவது அவசியம்.**

✡ **எடுத்துக்கொண்ட செயல்களை முழுமையாகச் செய்தால் எண்ணம் சமர்ப்பணமாக உதவும்.**

✡ **ஜட எண்ணமும், சூட்சும எண்ணமும் சமர்ப்பணமானால் நாம் மனத்தின் பிடியிலிருந்து விடுபடுவோம்.**

✡ **மனத்திற்கு அடுத்தது உணர்ச்சி; முடிவானது உடல்.**



எண்ணம் இரு நிலைகளிலும் சமர்ப்பணமானதற்குரிய அறிகுறிகள்:

✡ **மனம் அமைதியுறும்.**

**ஓடும் எண்ணங்கள் ஓடா.**

**சிந்தனை வலுவிழக்கும்.**

**மௌனம் சேர ஆரம்பிக்கும்.**

**குழப்பம் மனத்தை விட்டு விலகும்.**

மனத்தில் பிரச்சினையாக இருந்தவை, வாழ்விலும் பிரச்சினையாக இருக்கா. அமைதி, சாந்தி என்பவற்றை பகவான் calm, quiet, stillness, silence என வேறுபடுத்திக் கூறுகிறார். ஓடும் எண்ணம் ஓடுவதை நிறுத்துவது, ஓட்டம் நிற்பது, stillness. எண்ணங்கள் மனத்திலிருந்து ஓடாமலிருப்பது நிதானம், quiet. அவை ஓடும் திறமையை இழப்பது அமைதி, calm. கீழிருந்து எழுபவை இது. இவை மேலிருந்து வருவது மௌனம் Silence.

சமர்ப்பணம் பூர்த்தியாகி, சரணாகதி எழுந்து, அதுவும் பூர்த்தியாக எண்ணமும், சூட்சும எண்ணமும் சமர்ப்பணம் செய்யப்பட்டதுபோல் உணர்ச்சியும், சூட்சும உணர்ச்சியும் சமர்ப்பணமாக வேண்டும். முடிவாக உடல்என்பதில் சரணாகதி முடியும். உடலுக்கு உணர்வுண்டு; சூட்சுமம் உண்டு. அவைகளும் சமர்ப்பணமாக வேண்டும். சமர்ப்பணத்தில் யோகம் ஆரம்பித்து சரணாகதியில் முடியும். இவை யோக நிலைகளானால், நம்மால் முடிந்ததை முழுவதும் சமர்ப்பணம் செய்வது என்றால் என்ன? அதற்குரிய பலன் என்ன? அவை வாழ்வில் எப்படி பிரதிபலிக்கும்என்ற கேள்விகள் நமக்கு எழுகின்றன. இவற்றிற்கு,

✡ **குறைந்தபட்ச நிலையுண்டு.**

✡ **அதிகபட்ச நிலையுண்டு.**

அவற்றைக் கடந்த நிலைகளும் உள்ளன.

✡ **குறைந்தபட்சம்என்பது முடிந்ததை முழுமையாகச் செய்து முடிப்பது.**

**இதற்குரியது யோகப் பலன்.**

**இதற்கடுத்தக்கட்ட யோகப் பயிற்சி நமக்குப் பலிக்கும் நிலை ஏற்படுவது**

**அதற்குரிய வாழ்க்கைப் பலன்.**

**இன்றுள்ள எல்லாப் பிரச்சினைகளும் மறையும்.**

**இன்று எழக்கூடிய அத்தனை வாய்ப்புகளும் எழும்.**

**எழும் வாய்ப்புகளில் நாம் மறுக்காதது, ஒதுக்காதது, வெறுக்காதவை, அத்தனையும் பலிக்கும்.**

✡ **அதிகபட்சம்என்பது உடலுக்குரிய சூட்சும உணர்வு சமர்ப்பணமாகி சரணாகதியாகப் பலிப்பது.**

**அது நடைபெற்றதற்கடையாளம் உடல் நன்றியறிதலால் புல்லரிப்பது.**

**நம் சரணாகதியை அன்னை ஏற்றதற்கு அது அடையாளம்.**

***அது நடந்தபின் நமக்குத் தேவையானதுஎன்று ஒன்றில்லை.***

**அதன்பின் நடப்பவை அன்னைச் செயல்என்பதால் நாம் பேசவோ, நினைக்கவோ எதுவுமில்லை.**

**அதிகபட்சம் ஒரு க்ஷணம் நடந்தால், அது நிலைபெறுவது யோகம்.**

**ஒரு முறையானாலும் அதிகபட்சம்என்பதால், அதற்குப் பெருமையுண்டு.**

**குறைந்தபட்சத்தை மனம் ஏற்று, அதிகபட்சத்தை ஆத்மா தொட்டுவிட்டதால், நமக்கு நிலையாக உள்ளது வாழ்வில் எழும்.**

**அதற்கு இரு புறம் உண்டு.**

நாம் எந்த நிலையிலிருந்தாலும் முழு முயற்சிக்கு அடுத்த பக்கம் - அன்னை பக்கம் - போக நம்மால் எந்த நேரமும் முடியும்என்ற நிலை நமக்குப் பலிக்கும். இன்று அது நமக்கில்லை. எந்த நேரமும், எந்த பிரச்சினையுள்ளும் அன்னையை க்ஷணம் தவறாது அழைக்கும் திறன் யோக வாழ்வுக்குரிய திறன்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

**புதுமை உள்ளே எழுவதால் புத்துணர்ச்சி பொங்கி எழுகிறது.**



# மேல் மனது - ஆழ் மனது

N. அசோகன்

கல்லூரியில் படித்த காலத்தில் லட்சிய மனப்பான்மையுடன் மாணவர் தலைவராகச் செயல்பட்டவர்கள் பிற்காலத்தில் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடும்பொழுது, கல்லூரி நாள்களில் அவர்களோடு பழகியவர்கள் இப்பொழுது அவர்களைச் சந்திக்கும்பொழுது, “அந்நாள்களில் உங்கள் கண்களில் தெரிந்த லட்சியக் கனல் இப்பொழுதில்லை” என்பார்கள். வயதும், அனுபவமும் கொடுக்கின்ற அமைதியை, ஆர்வக்கனல் குறைந்துவிட்டதாக மற்றவர்கள் தவறாகப் புரிந்துகொள்கின்றனர். திருமணம் ஓரளவுக்கு ஆர்வக்கனலைக் குறைக்கத் தான் செய்கிறது. ‘பர்சனாலிட்டி’யில் வரும் முதிர்ச்சியை, லட்சியத் தீவிரம் குறைந்துவிட்டதாகத் தவறாக எடுத்துக்கொள்கின்றனர். மனிதனுடைய ‘பர்சனாலிட்டி’யின் அமைப்பில் அவனுடைய மேல்மனது அவனுடைய ஆழ்மனத்திற்கு நேர்எதிராகச் செயல்படுவதைப்போல் அமைந்துள்ளது. அவனுடைய ஆழ்மனதுதான் மேல்மனத்தைவிடப் பரந்தது; உண்மையானதும்கூட. அவனுடைய மேல்மனது எதை வெறுத்து ஒதுக்குகிறதோ, அதை அவனுடைய ஆழ்மனது நாடவும் செய்கிறது. அவரவர்களுக்கு அமைகின்ற வேலை மற்றும் திருமணத்தில் இதை நாம் பார்க்கலாம்.

நிறைய பேசக்கூடிய பழக்கம் உடையவர் குறைந்த அளவிற்குப் பேசுகின்ற பெண்ணை மனைவியாக நாடுகிறார். தாராளமாகச் செலவு செய்பவர், சிக்கனமாகச் செலவு செய்கின்ற பெண்ணை மனைவியாக நாடுகிறார். இப்படி மேல்மனம் நாடுவதும், ஆழ்மனம் தேடுவதும் எல்லா விஷயங்களிலும் வேறுபட்டு நிற்கிறது. ‘திருமணங்கள் வானுலகில் நிச்சயிக்கப்படுகின்றன’ என்று இத்தகைய சிக்கல்களில் மாட்டிக் கொள்கின்றவர்களை மற்றவர்கள் தேற்றுகின்றார்கள். இப்படி முரண்பாடான சுபாவமுள்ள தம்பதியர்கள் தம்முடைய கடைசிக் காலத்தில் தமக்கிடையேயுள்ள முரண்பாடுகள் உடன்பாடுகளாக செயல்பட்டு

வந்துள்ளனஎன்று புரிந்துகொண்டு, தம்முடைய திருமண வாழ்க்கையைப் பாராட்டிக்கொள்கிறார்கள். சில பேருடைய வாழ்க்கை ஒரு கட்டத்தில் அமைதியாகவும், பின் அதைத் தொடர்ந்து மிகவும் சுறுசுறுப்பாகவும் இயங்குவது உண்டு. இப்படி அமைதியும், ஆர்ப்பாட்டமும் அடுத்தடுத்து வருவதை எவரும் சரியாகப் புரிந்துகொள்வதில்லை. எல்லாம் விதியின் செயல்பாடுஎன்று சமாதானம் சொல்லிக்கொள்கிறார்கள்.

சர்தார் வல்லபாய் படேல் அகமதாபாத் நகரில் வழக்கறிஞராகச் சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டிருந்தபொழுது காந்தியடிகளைச் சந்தித்தார். அவரைச் சந்தித்தபின்பு விடுதலைப் போராட்டத்திற்காகத் தம்மை முழுவதுமாக அர்ப்பணித்துக்கொண்டார். அவருடைய வாழ்க்கையில் இத்தகைய ஒரு திருப்பம் வரும்என்று அவர்கூட நினைத்துப் பார்க்கவில்லை. அவருடைய ஆரம்பக்கால வாழ்க்கையில் அவருக்கு எதிராகச் செயல்பட்டவர்களிடம் அவர் மிகவும் கடுமையாக நடந்துகொண்டதுண்டு.

இரும்புக்கரம் கொண்டவர்என்று பெயர் வாங்கிய அம்மனிதர் பாரதமாதாஎன்று பேச்செடுத்தால் அப்படியே உருகிப்போவார்.

படேல் பற்றி ஸ்ரீ அரவிந்தர் பேசும்பொழுது காங்கிரஸ் தலைவர்களில் படேல் ஒருவருக்குத்தான் மனோபலம் இருந்ததுஎன்று குறிப்பிட்டார். அவர் இங்கிலாந்தில் இருந்தபொழுது அவருடைய காலில் ஓர் ஆபரேஷன் செய்யவேண்டி இருந்தது. மயக்கமருந்துகூட இல்லாமல் அந்த ஆபரேஷனைச் செய்துகொண்டார். மனிதர்களிடம் அவர் காட்டிய கடுமையையும், பாரதமாதாவிடம் அவர் காட்டிய கனிவையும் எப்படி நாம் சேர்த்து வைத்துப் புரிந்துகொள்வது? இதுதான் வாழ்க்கையின் ரகசியம். காஷ்மீர் ஒரு பிரச்சினையாக மாறியபொழுது நேருஜி சரியான முடிவுக்கு வரமுடியாமல் தடுமாறினார். அந்த ஆரம்பத் தடுமாற்றத்தைத் தொடர்ந்து காஷ்மீர் இன்றுவரை பிரச்சினையாக உள்ளது. படேல் கடுமையானவர்; நேரு தடுமாறக்கூடியவர்என்று குறை சொல்ல முடியுமா? அப்படிச் சொல்வதற்கு இடம் இருக்கிறது. மேலோட்டமாகப் பார்த்தால் நாம் தவறான முடிவுகளுக்கு வருவோம். நேரு மற்றும் படேல் விஷயத்தில் இவ்உண்மைகள் தெளிவுபடாது.



கடுமையும், கனிவும் இரண்டுமே நம்மிடத்திலேயே இருக்கின்றன. நம்முடைய குறைகளுக்காக நாம் நம்மை நொந்துகொள்கின்றோமா? அல்லது நம்முடைய வலிமைகளுக்காகப் பெருமைப்பட்டுக்கொள்கின்றோமா? சில சமயம் நாம் இரண்டையுமே செய்கிறோம். ஆனால் பெரும்பாலான நேரங்களில் இரண்டையுமே உணராமல் நாம் வாழ்க்கையை நடத்துகிறோம். இதுதான் வாழ்க்கையின் அந்தரங்க ரகசியம். தம்முடைய ஆழ்மனத்தின் போக்கைப் புரிந்துகொள்ளக்கூடியவரால்தான் தம்முடைய வாழ்க்கையின் போக்கைப் புரிந்துகொள்ள முடியும்.

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

90 வயதில் அன்னையின் புன்னகையும், சிரிப்பும் 15 வயது குழந்தையினுடையது போலிருந்தன. ஆன்மா வெளிப்படும் பொழுது சிரிப்பு போன்ற நம் பழக்கங்கள் இளமையைத் தாங்கிவரும்.

***அன்னை ஜீவியத்தின் அருள் நிறைந்த இளமை.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

நம் இன்றைய திறமைகள், பண்புகள், அறிவாற்றல், நினைவாற்றல், கருத்தாற்றல் போன்றவை புனிதப்பட்ட நிலையிலும் அன்னையைச் சேரத் தடையாகும். அவற்றைப் போற்றிப் புகழ்வதே பெருந்தடையாகும்.

***புனிதப்பட்ட ஆற்றல்களும் அன்னையை அடையத் தடை.***

# அன்பர் கடிதம்

*ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய!*

எனக்கு அன்னையைப்பற்றிப் பல வருடங்களாகத் தெரியும். நான் அன்னையை மட்டுமே வணங்கிக்கொண்டிருப்பவள். கடந்த ஏப்ரல் மாதத்தில் என் அக்கா வேலைக்குச் சென்றிருந்தார். திடீரென வேலை செய்யும் இடத்திலேயே மயக்கமடைந்து விழுந்துவிட்டார். அந்நிலையிலேயே கம்பெனியில் இருந்து வீட்டுக்கு ஜீப்பில் கொண்டுவரப்பட்டார். அவரை அந்நிலையில் கண்டவுடன் என் மனம் சட்டென அன்னையை நினைத்தது. உடனே நான் அன்னையிடம் வேண்டிக்கொண்டேன். ஊரிலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ள ஹாஸ்பிடலில் சேர்வதற்குள் அவரின் மயக்கம் தெளிந்து, பேச ஆரம்பித்துவிட்டார். மருத்துவர் பரிசோதித்துப் பார்த்து ஒன்றும் இல்லைஎனக் கூறி, 3 பாட்டில் குளுகோஸ் ஏற்றி, மாலையே வீட்டுக்கு அனுப்பிவிட்டார்.

நினைத்தமாத்திரத்தில் ஓர் அற்புதத்தை ஏற்படுத்திக்கொடுத்த அன்னையின் அன்பை நினைக்கும்பொழுது கண்களில் நீர் வருவதைத் தவிர என் நன்றியை தெரிவிக்க வேறு வழியில்லை.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனத்திற்கு மௌனம் சித்திப்பது மௌனத்தின் ஆன்மீக அம்சம் சித்திப்பதாகும். அது மனம் சலனமற்றிருப்பதைக் காட்டும். அதை 'ஆன்மீக மௌனம்' மனத்தில் குடிகொண்டது என்பர்.

***மௌனம் சித்திப்பது***

***மௌனத்தின் ஆன்மீக அம்சம் சித்திப்பதாகும்.***



# ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

N. அசோகன்

**121.** **நல்லெண்ணம் மற்றும் பரநலம் பாராட்டல் ஆகிய பண்புகள் பண வரவை அதிகரிக்கும். ஏனென்றால் இவை விசாலப்படுத்தும் பண்புகள். இவற்றால் உற்பத்தி திறனையும் அதிகரிக்க முடியும்.**

**122.** **வங்கியில் உள்ள சேமிப்பைவிட வீடு, நிலம், நகை போன்ற பொருட்களுக்குத்தான் மதிப்பு அதிகம். ஏனென்றால், மனிதனுடைய அறிவு பிஸிக்கலாக இருக்கிறது. இந்நிலையில் மனிதனுக்கு கண்ணிற்குத் தெரிந்த நிரூபணங்கள் தேவைப்படுகின்றன.**

**123.** **பணக்காரர்களைவிட ஏழைகளுக்குத்தான் கடன் அதிகம் தேவைப்படு-கிறது. ஆனால் திருப்பித் தரும் திறன் பணக்காரர்களுக்கு அதிகம் இருப்பதால், நடைமுறையில் அவர்கள்தான் ஏழைகளைவிட அதிக கடன் பெறுகிறார்கள்.**

**இது பார்வைக்கு நியாயமாக இல்லைஎன்றாலும், வாழ்க்கை இப்படித்தான் செயல்படுகிறது.**

**124.** **வேலைக்கு வழங்கப்படும் ஊதியம் அவ்வேலைக்குச் சமமாக இருக்க வேண்டும். சன்மானம் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருந்தால், இரண்டுமே உற்பத்தித் திறனை பாதிக்கும்.**

**125.** **"அவரவர் திறமைக்கு ஏற்ப வழங்கி, அவரவர் தேவைக்கு ஏற்ப பெற்றுக்கொள்ள வேண்டும்" என்பது ஒரு சிறந்த கம்யூனிஸக் கொள்கையாக இருக்கலாம். ஆனால், மக்களுக்கு உண்மையான பரநலம் பாராட்டும் தன்மை இருந்தால்தான் இக்கொள்கையை நல்லவிதமாகக் கடைப்பிடிக்க முடியும்.**

126. நிறைய பணத்தைச் சம்பாதிப்பதும் அல்லது வாரிசுஎன்ற முறையில் சொத்தாகப் பெறுவதும் ஒரு வசதியான, பாதுகாப்பான வாழ்க்கையைப் பெற்றுத் தரலாம். ஆனால் பணமிருந்தால் சந்தோஷம் கிடைக்கும்என்ற அவசியமில்லை.

127. சமூகம் ஒரு பிரிவினரை ஒதுக்கி வைத்தால், அவர்கள் பாதுகாப்பு வேண்டி பணத்தை நிறைய சம்பாதித்து வைத்துக்கொள்வார்கள். ஐரோப்பாவில் வாழ்ந்த யூதர்கள் இப்படித்தான் நிறைய பணத்தைச் சேமித்து வைத்திருந்தார்கள்.

128. வறண்ட பிரதேசங்களான ராஜஸ்தான், ராமநாதபுரம் மற்றும் இஸ்ரேல் ஆகியவிடங்களைச் சேர்ந்த மார்வாரி இனத்தவர், செட்டியார் இனத்தவர் மற்றும் யூதர்கள்என்ற மூன்று பிரிவினரும் மிகவும் வசதியானவர்களாக இருக்கின்றார்கள்.

இதை வைத்துப் பார்க்கும்பொழுது, கடுமையான சுற்றுப்புறச் சூழல் மக்களைக் கடின உழைப்பாளிகளாகவும், திறமைசாலிகளாகவும் மாற்றி, அவர்களை அதன்வழி செல்வர்களாக மாற்றுகிறதுஎன்றாகிறது.

129. வட்டி வாங்குவது பழங்காலத்தில் ஒரு பாவமாகக் கருதப்பட்டதால் வட்டிக்கடை வைப்பவர்கள் சமூகத்தில் குறைவாகக் கருதப்பட்டார்கள். ஆனால் இன்று கடன் என்பது உலகப் பொருளாதாரத்தில் முக்கியமாக விளங்குவதால், பழைய அபிப்பிராயங்களைப் பெரும்பான்மையான மக்கள் கருதுவதில்லை.

130. வட்டிக்கடைக்காரர்கள் ஈவு, இரக்கமில்லாமல் செயல்படுபவர்கள்என்ற பெயர் எடுத்திருப்பதால், வட்டித் தொழில் பாவமானதாகக் கருதப்பட்டு வந்ததாகத் தெரிகிறது.

131. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் சமூகம் மக்கள் நலன் காக்கும் கருவியாக மாறியிருப்பதைப் பார்த்தால், சமூகத்தின் அங்கத்தினர்களுடைய குறைந்தபட்சப் பராமரிப்பிற்குச் சமூகம் ஏதேனும் செய்யவேண்டும் என்ற இடத்தை சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

132. வாங்குகின்ற பொருள் திருப்தியாக இல்லைஎன்றால் பணத்தைத் திருப்பித் தருவோம்என்ற பாலிசி அமெரிக்காவில் கடைகளில் விற்பனையை அமோகமாக உயர்த்தியுள்ளது. நம் நாட்டு வியாபாரத்திலும் இதே பாலிசியைக் கடைப்பிடித்தால் இங்கேயும் அதே அதிகரிப்பு விற்பனையில் வரும்.



133. பழைய முதலாளித்துவம் மீண்டும் உலகில் தலையெடுக்க வாய்ப்பில்லை. மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும், வடஅமெரிக்காவிலும் சோஷலிசக் கொள்கைகள் ஓரளவிற்கு அமுல்படுத்தப்பட்டு அங்கே உழைக்கும் வர்க்கத்தினர் வளமையாக இருப்பதால், கம்யூனிஸம் இந்நாடுகளில் பரவ முடியாமல் போய்விட்டது.

134. ஓய்வூதியம்என்பது ஓய்வு காலத்தைப் பற்றிய மக்களின் பயத்தைப் பெருமளவிற்குக் குறைத்துவிட்டது. காப்பீட்டுத் திட்டங்களைப் பரவலாக அமுல்படுத்தினால் மக்களிடையே உள்ள எதிர்காலத்தைப் பற்றிய பயம் மேலும் குறையும்.

135. தவணைமுறைக் கடனை அமுல்படுத்தியதால் இந்தியப் பொருளாதாரம் பயன் பெற்றதுபோல காப்பீட்டுத் திட்டங்களை அமுல்படுத்துவதாலும் நல்ல பலன் பெறலாம்.

136. இந்தியா பொதுவாக ஏழை நாடாக இருப்பதால் இங்கே ஊழல் மலிந்து உள்ளது. மக்களின் வாழ்க்கைத் தரம் உயருமளவிற்கு இங்கே ஊழலும் குறையும். அப்படிக் குறையவில்லைஎன்றால் இந்தியச் சமூக அமைப்பில் ஏதேனும் ஒரு பெரிய குறையிருப்பதாக அர்த்தமாகும்.

137. நல்ல அறிவுத் திறனிருக்கும்பொழுது சமூகத்தின் ஒரு பிரிவினர் நீண்ட காலத்திற்கு வறுமையால் பீடிக்கப்பட்டிருந்தால், அவர்கள் சுயநலமிகளாகவும், ஆதாயம் தேடுபவர்களாகவும் மாறிவிடுகிறார்கள். பணம் வாழ்க்கையில் முக்கியமானதாக மாறும்பொழுது இப்படி மனோபாவம் மாறுகிறது.

138. சுமுகத்திற்கும், சுபிட்சத்திற்கும் நிறைய தொடர்பு உண்டு. சுமுகமான சூழ்நிலையில் நம் கவனம் எல்லாம் வேலையின் மேல் போவதால் நம்மால் சாதிக்க முடிகிறது. சுமுகமற்ற சூழலில் நம் கவனம் சிதறுவதால் வேலை கெடுகிறது.

**139.** குறைந்த விலையும், அதிக விற்பனையும் தொடர்புள்ளவைஎன்பதுபோல, உயர்ந்த தரமும், அதிக விலையும் தொடர்புள்ளவைகளாகும். முதல் தொடர்பு ஏழைகளுக்கு உதவுவதுபோல இரண்டாம் தொடர்பு பணக்காரர்களுக்கு உதவுகிறது.

**140.** பணமயமான பொருளாதாரமுறை இப்பொழுது மாப்பிள்ளைகளுக்கும் 'வரதட்சிணை' என்ற பெயரில் விலை கொடுக்கும் அளவிற்கு சமூகத்தை ஆக்கிரமித்துக்கொண்டுள்ளது.

*தொடரும்.....*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பரநலம், சுயநலம் என்பவை கொடுப்பது பெறுவதாகும். அது சௌகரியமாகவோ, தொந்தரவாகவோ வெளிப்படும். தன்னலமற்றவனின் நட்பு, மற்றவர் வாழ்வை மலரச் செய்யும். சுயநலமானவனின் தொடர்பு, வாழ்வில் சிரமங்களை உற்பத்தி செய்யும்.

***சுயநலம் சுருக்கும்; பரநலம் மலரும்.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

தெய்வம் கொடுத்ததை அனுபவிக்க முனைவது, ஓர் ஆசையைப் பூர்த்தி செய்ய நாமே முயல்வதினின்று வேறுபட்டது. நாம் முனைய அனுமதியில்லை. தெய்வம் கொடுத்ததை அனுபவிக்காமலிருக்க அனுமதியில்லை.

***அனுபவிக்காமலிருக்க அனுமதியில்லை.***





# அடுத்த கட்டம்

வி. ரமேஷ்குமார்

மொட்டைமாடி. நாள் முழுதும் அடித்த வெயிலுக்கு மேகமூட்டமும், தென்றல் உடலை வருடுவதும் இதமாக இருந்தது. தொடர்ந்து கும்மென்று மரமல்லிகையின் வாசம். ஆகஸ்ட் மாதத்தில் மரமல்லிகையின் பருவம் ஆரம்பிப்பதுகூட ஏதோ சொல்வது போலிருந்தது. என் பார்வையே அதைச் சொல்லி இருக்க வேண்டும்.

'ஆரம்பித்துவிட்டாயா?' என்பதுபோல் பார்த்தார் நண்பர் ஜெகன். "மாலையிலிருந்து ஒரு மாதிரியாகத்தான் இருக்கின்றீர்கள்", கிண்டல் அடித்தார். ஆம், இன்று ஆகஸ்ட் 15. தியான மையத்திலிருந்து சொற்பொழிவும், தியானமும் முடிந்து இப்போதுதான் வீடு திரும்பினோம். அங்கு ஆரம்பித்த நெகிழ்வும், ஆச்சரியமும் விலகாமல் இருந்தேன்.

"என்ன ஜெகன், நீங்கள் உணரவில்லையா? அந்தச் சூழலிலேயே ஒரு நெகிழ்ச்சியும், நன்றியும் இருப்பதாகப் பட்டதே......?"

"நிச்சயம் உணர்ந்தேன். அந்த அதிர்வு எப்படிச் சாத்தியமாயிற்று என்றுதான் யோசித்துக்கொண்டு இருக்கிறேன்" என்றார்.

"எனக்கும் அதுவே! அந்தக் கூட்டத்தில் இருந்த, மற்றும் வரிசையில் நின்ற அத்தனைப் பேரின் முகத்திலும் தெரிந்த நம்பிக்கை, மகிழ்ச்சி, விசுவாசம், நிறைவு.... இவையெல்லாம் எப்படி? சாதாரணமாக யார், எவ்வளவு கொடுத்தாலும், அது இறைவனே ஆனாலும், இன்னும் கொஞ்சம்.... என்று

கோரிக்கைப் பட்டியல் வைத்துக்கொண்டு, திருப்தியில்லாமல் இருப்பதுதான் நம் சுபாவம். அதையும் மீறி, இத்தனைப் பேரின் முகங்களும் ஜொலிக்க வேண்டுமென்றால்..... எவ்வளவு பெற்று இருப்பர்...... அல்லது அன்னை எவ்வளவு கொடுத்து இருந்தால், இந்த இடமே கனக்கும் அளவிற்கு விசுவாசத்தால் நிரம்பும்....." சொல்லும்போதே உடல் சிலிர்த்தது.

"நம் பழைய சம்பிரதாயமாக இருந்தால் விரதம், வேண்டுதல்என்று பதிலுக்கு ஏதாவது திருப்திப்பட்டுக்கொண்டு இருக்கலாம்" புலம்பினேன்.

''மாதம் தவறாமல் மலர்ந்த ஜீவியம் வாங்குவதும், ஊதுவத்தி வாங்குவதுமே எனக்குப் பெரிய நன்றியாகப் படுகிறது" சிரித்தார் ஜெகன்.

அவர் சிரிப்பாகச் சொன்னாலும், அதிலுள்ள உண்மை தைத்தது. "இல்லை ஜெகன், எங்கேயோ வழி மாறிவிட்டோம். பிரச்சினை நிறைந்த காலத்தில் எப்படி அன்னையைப் பரபரப்பாகத் தேடினோம். புஷ்பாஞ்சலியும், சுத்தமும்என்று பார்த்து, பார்த்துச் செய்தோம். அதன்பிறகு என்ன ஆனது? அடுத்த கட்டத்திற்கு ஏன் போக முடியவில்லை....?" சொல்லிக் கொண்டே போனபோது.... மின்னலடித்தது! 'அட...... அடுத்த கட்டம்......'

''நாளை ஞாபகப்படுத்துங்கள் ஜெகன். ராஜனைப் பார்ப்போம். செய்கிறாரோ இல்லையோ, அன்னையைப் பற்றி நிறைய ஆராய்ச்சி செய்து வைத்திருப்பவர். ஏதாவது ஐடியா கிடைக்கும்....."

ராஜன், பல ஆண்டுகளாக அன்னை பக்தர். வீடு முழுதும் அன்னை படங்களும், புத்தகங்களும் நிரம்பி இருக்கும். அனைத்துத் தகவல்களையும் பக்கம்வாரியாகக் கூறுவார். அன்னைக் கோட்பாடுகளைப் பற்றி விரிவாகப் பேசுவார். பின்பற்றுகிறாரா என்றால், 'அடுத்த ஆகஸ்டு 15 முதல்' என்பார்..... பல ஆண்டுகளாகச் சொல்வதாகக் கேள்வி.

"வாங்க ரவி, ஜெகன்....." வரவேற்றார். "என்ன இந்தப் பக்கம்.....?"

"ஒன்றுமில்லை....." என்று ஆரம்பித்து, நேற்று நடந்ததைச் சொன்னோம். "அன்னையை இன்னும் அதிகமாக வழிபட வழி சொல்லுங்களேன்".



"வழிபாடா?" சிரித்தார். "என்னை வழிபடுவதில் திருப்தி அடைவதை நான் விரும்புவதில்லை. நான் விரும்புவது திருவுருமாற்றம். அதற்கான முயற்சியை எடுப்பதற்குத் தயங்குபவர்கள்தான் வழிபாடே போதுமென்று இருக்கின்றார்கள்" என்று அன்னையே ............................................................................ புத்தகத்தில் ................... பக்கத்தில் கூறி இருக்கிறாரே.

இதை..... இதைத்தானே எதிர்பார்த்தேன் நான்.

"திருவுருமாற்றமெல்லாம் பெரிய வார்த்தை இல்லையா?" குறுக்கிட்டார் ஜெகன்.

"என்ன பெரிய வார்த்தை...... நம் குணங்களையெல்லாம் அன்னைக்குப் பிடித்த குணங்களாக மாற்றவேண்டும், அவ்வளவுதான். நான் பட்டியல் ரெடி செய்துவிட்டேன். அடுத்த அன்னை பிறந்தநாளிலிருந்து ஆரம்பிக்கப் போகிறேன்....." நானும், ஜெகனும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டோம்.

புரிந்துகொண்டார் ராஜன். "என்ன கிண்டலாக இருக்கிறதா? இந்த முறை தப்பாது.... உண்மை தெரியுமா? நான் பல அன்னை கோட்பாடுகளைப் பின்பற்றத்தான் செய்தேன். ஆனால், எதையும் முழுமையாகப் பின்பற்ற முடியவில்லை. காரணம் மிகஉயர்ந்த ஒரு வழிமுறையை உடனடியாகப் பின்பற்ற வேண்டும்என்று நினைத்ததுதான். பிறகுதான் புரிந்தது, எதற்கும் பல கட்டங்களாக, படிப்படியாகத்தான் போக முடியும்என்பது. குறிப்பாக, சுபாவம் எங்கெல்லாம் அன்னை வழிமுறைகளை ஒட்டி வருகிறதோ, அங்கே எல்லாம் வெற்றி கிடைக்கிறது. இதைப் புரிந்துகொள்ள இவ்வளவு நாளாயிற்று....." சத்தம் போட்டு, மனம் விட்டு சிரித்தார். எங்களுக்குத்தான் சிரிப்பு வரவில்லை. குழப்பம்தான் வந்தது.

"எங்கள் சுபாவத்தை எப்படிக் கண்டுபிடிப்பது?"

''நான் ஒரு கேள்வி லிஸ்ட் தயார்செய்து வைத்திருக்கிறேன்*; தருகிறேன். வீட்டிற்குச் சென்று பொறுமையாகப் பாருங்கள்'' என்று

* பார்க்க: பக்கம் 49

சொல்லிவிட்டு, "ஜோக் இல்லை ரவி..... உண்மையில் முடியும்.... நாம்தான் முயல்வதில்லை."

''உன்னையே எடுத்துக்கொள்ளேன். அன்னையிடம் வந்தபின் அனைவரும் பின்பற்றுவது சுத்தம். சுபாவத்திலேயே நீ அதிக சுத்தம் பராமரிப்பவன்என்று எனக்குத் தெரியும். அன்னையிடம் வந்தபிறகு, அன்னைக்குப் பிடித்த விதத்தில் அதிகபட்சச் சுத்தத்தை நீ பின்பற்றியபோது உன் நண்பர்கள் என்ன சொன்னார்கள்என்று நினைவு இருக்கிறதா?"

யோசித்தேன். "ஆம்! நிதிவேந்தன், 'இவ்வளவு பளிச்சென்று இருந்தால் உள்ளே வருவதற்கே கூச்சமாக இருக்கிறது' என்றான்".

"பின் என்ன ஆயிற்று? அதோடு அந்தக் கூட்டமும் போயிற்று. அவர்கள் வந்து போனதும் இருக்கும் சிகரெட் புகை மூட்டமும், பான்பராக், பஸ் டிக்கெட், சினிமா டிக்கெட் குப்பைகளும் ஒழிந்தது அல்லவா?"

"ஆமாம்" ஆச்சரியத்துடன் பார்த்தேன்.

"இன்னொரு உதாரணத்திற்கு வருகிறேன். உனக்கு சுபாவத்தில் அரசியல் பிடிக்காதுஎன்று தெரியும். உன் வீட்டுப் பக்கத்து டீ கடையில் தினமும் சேரும் நண்பர்கள்குழாம் சினிமாவையும், அரசியலையும் அலசும். நீயும் இருப்பாய். அன்னைக்கு அரசியல் பேசுவது பிடிக்காது என்றதும், நீ பேசுவதை நிறுத்தினாய். என்ன ஆயிற்று?"

ஜெகன் உற்சாகத்துடன் குறுக்கிட்டார், "கார்ப்பரேஷன், ஆக்கிரமிப்பு என்று அந்த டீக்கடையை அகற்றியது. அந்தக் கூட்டமும் நின்றது".

ராஜன் மிகுந்த உணர்ச்சியில் பொங்குவது தெரிந்தது. "அதுதான் அன்னை. 'நீ பொய் சொல்ல பிரியப்படாவிட்டால் நான் பொய் சொல்லும் சந்தர்ப்பத்தையே தருவதில்லை' என்பதை அனைவரும் படித்திருப்போம். அது ஒரு குறியீடு. அதுபோலவே, நீ அன்னைக்காக சுத்தத்தை விரும்பினால், அசுத்தப்படும் சந்தர்ப்பத்தையே அன்னை அளிப்பதில்லை.



அன்னைக்காக அரசியல் பேசமாட்டேன் என்றால், அரசியல் பேசும் சந்தர்ப்பத்தையே அளிப்பதில்லை....." கண் கலங்கினார். "இதை எல்லாம் பலமுறை பார்த்தாலும் நம்பிக்கை வரவில்லை..."

சற்று நேரம் மவுனம் நிலவியது. அந்த மவுனமே தீர்மானத்தை வலுவாக்கியது. நிச்சயம் அடுத்த, அடுத்த கட்டங்களில் அன்னையைத் தரிசிப்பேன் என்ற நம்பிக்கை பிறந்தது.

உள்ளே சென்று பட்டியலை எடுத்துவந்தார் ராஜன். "இந்தா ரவி, நான் பேச்சளவில் அடிக்கடி நின்றுவிடுவேன். அது என் சுபாவம்...." சிரித்தார். "நீ சில இடங்களில் தீவிரமானவன்; முயற்சி செய்து பார்".

பார்த்தேன், ஒரே கேள்விகளாக இருந்தது. "என்ன இது?" இழுத்தேன்.....

"பொதுவாக நீ அன்னைக்காக மாறவேண்டியதை உடல், உணர்வு, அறிவு என்று பிரிக்கலாம். உன் சுபாவத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால் முதலில் உன்னிடம் உள்ள அன்னைக்கேற்ற சுபாவத்தையும், அன்னைக்கு எதிரான சுபாவத்தையும் தெரிந்துகொள்ள வேண்டும். அது உன்னையே நீ பார்த்தால்தான் முடியும். இந்தக் கேள்விகளைத் தினமும் உன்னையே நீ கேட்டுக்கொள்ள அரை மணி நேரம்தான் ஆகும். நாளடைவில் நீ அன்னைக்கு ஏற்றவனாக மாற, மாற ஐந்து நிமிடம்கூட ஆகாது. ஒரு நாளைக்கு 1440 நிமிடங்கள் அன்னை உன்னுடன் இருக்க வேண்டும்என்று நினைக்கும்போது அதற்காக just 2% நேரம், அதாவது முப்பது நிமிடம் செலவிடக்கூடாதா?"

மிக எளிமையாகத் தோன்றியது. எழுந்தோம்.

"நன்றி ராஜன்! என்னால் முடியும்என்று நினைக்கின்றேன்...."

"தவறு ரவி..... 'என்னால் முடியும்' என்பது நீ அன்னையின் கையைப் பிடித்து நடப்பதுபோல; சுற்றி இருக்கும் சுவாரஸ்யங்களில் மறந்து க்ஷண நேரமேனும் விட்டுவிடலாம். அன்னை உன் கையைப் பிடித்துக்கொள்ள வை. எந்தத் தாயும் கை பிடித்து அழைத்துச் செல்லும் குழந்தையை

அதன் இலக்கில் சேர்க்காமல் திரும்புவதில்லை. கடக்க முடியாத இடங்களில்கூட இடுப்பில் தூக்கிச் சென்றாவது சேர்ப்பார், இல்லையா?"

"புரியவில்லையே....."

"அன்னை உன்னைப் பிடித்துக்கொள்ள வேண்டும்என்றால் உனக்குத் தேவை முழு நம்பிக்கை. அடுத்த கட்டத்தை அடைய வேண்டுமென்பதில் முழுஆர்வம், அதற்கான முயற்சி மட்டுமே".

"உதாரணமாக, உழைப்பு உன் சுபாவம்என்பது தெரியும். உழைப்பு என்ற தலைப்பில், உன்னுடைய வேலைக்கான திறமை, அறிவை அதிகப்படுத்த ஏதாவது செய்தாயாஎன்ற கேள்விக்கு முதலில் 'இல்லை' என்றும், அடுத்த அடுத்த நாட்களில் 'ஆம்' என்றும் சொல்லுமளவிற்கு உன் ஆர்வமும், முயற்சியும் இருந்தால்...... அன்னை உன்னைப் பிடித்துக் கொள்வார்; அதற்கான சந்தர்ப்பம், சூழ்நிலை உருவாக்கித் தருவார். அதுதான் அடுத்த கட்டம். வேலையை விருப்பத்துடன் செய்வதில் ஆரம்பித்து, வேலை அன்னை அருளை வெளிப்படுத்த உதவும் பாலம்என்ற எண்ணம் வரை கட்டங்களைப் போட்டுக்கொள்ள வேண்டியது உன் முயற்சி. அன்னையே அந்தப் படிகளில் உன்னை அழைத்துச் செல்வார்.

இது போலவே ஒவ்வொரு கேள்வியிலும் உன்னுடைய நல்ல சுபாவத்தை அறிந்து அதிகப்படுத்துவதும், அன்னைக்குப் பிடிக்காதவற்றைக் கண்டுபிடித்து, அதற்கு எதிரான அன்னை வழிகளைப் புகுத்த முயன்றால் - ஒரு படி போதும் - மீதியை அன்னை அதற்கான சந்தர்ப்பத்தை அளித்துப் பார்த்துக்கொள்வார்....."

பெரிய சொற்பொழிவைக் கேட்பதுபோல இருந்தது. "நன்றி ராஜன்!" கிளம்பினோம்.

வீடு திரும்பியதும் பரபரவென்று இருந்தது. குளித்து, அன்னை, பகவான் படம் முன் அமர்ந்தேன். எத்தனை முறை பார்த்தாலும் சலிக்காத அந்த புன்முறுவல் நம்பிக்கையை அதிகப்படுத்தியது.



"ஆத்ம சோதனை - தினந்தோறும்" என்று அழகாகத் தலைப்பிட்டு இருந்தார். கேள்விகளைப் பிரித்தேன். ஒன்று ஒன்றாகப் பதில் தேட ஆரம்பித்தேன். குப்பென்று வியர்த்தது. காரணம், ஒரு கேள்விக்குக்கூட உண்மையான பதில் தர மனம் ஒப்பவில்லை. காலையில் என் வண்டிக்கு குறுக்கே வந்தவனைப் படுகேவலமாகத் திட்டி, சாபமிட்டதிலிருந்து....., பேராசையும், பொறாமையும், கயமையும், காமமும்..... நாள் முழுதும் என்னை ஆக்கிரமித்து, அவையே என் வாழ்க்கையை நடத்துவது தெரிந்தது. அத்தனைக்கும் ஒரு பதில் மனதில் இருப்பதும் தெரிந்தது. 'ஐயோ! கனா தூரம் என்பார்களே! அதுபோல அன்னையிடம் இருந்து அவ்வளவு தொலைவிலா இருக்கிறேன்! அப்படியுமா அன்னை என்னை ஏற்றுக் கொண்டார்கள்!' நெகிழ்ந்துபோனேன். என் உண்மை உருவத்தை நானே ஓர் இரண்டாம் மனிதனாகப் பார்க்க முடிவதே அன்னை அருள்தான் என்று தோன்றியது.

'இனி சொல்வதற்கு, யோசிப்பதற்கு ஒன்றுமில்லை. செய்வதற்குத்தான் எல்லாம் இருக்கிறது'.

'அன்னைக்காக ஒரு சுபாவத்தையாவது மாற்றியே ஆகவேண்டும்' என்ற வைராக்கியம் வந்தது. எளிதாக இருந்தது, உணர்வில் - காமத்திற்கான கேள்விதான். 'ஆம் அன்னையே! இன்றிலிருந்து கிளர்ச்சி ஊட்டும் எதையும் பார்க்கமாட்டேன், படிக்கமாட்டேன், கேட்கமாட்டேன், பேசமாட்டேன்' என்று கூறி, புலனாய்வுப் பத்திரிக்கைகள், நாவல்கள், ரேடியோ பாட்டுகள், டிவி வரை அனைத்தையும் தவிர்க்கிறேன். வாயால் சொன்னதுமே, உறுதி உள்ளே பாய்வது தெரிந்தது. அடுத்த, அடுத்த நாட்களில் அந்த கேள்விகளுக்கு 'இல்லை' என்ற பதில் சந்தோஷத்தை அளித்தது.

'இல்லை'யென்று சொல்வதற்கான அந்த இடைப்பட்ட நாட்கள்..... 'இதுதான் நரகமோ' என்று இருந்தது. 24 மணி நேரம்என்பது 240 மணி நேரம்போலப் போயிற்று. 'இவையெல்லாம் இல்லாமல் என்ன வாழ்க்கை' என்று மனது அடிக்கடி கூக்குரல் இட்டது. அதற்கு அது சொன்ன

காரணங்களும், சமாதானங்களையும் கவனிப்பதே சுவாரஸ்யமான பொழுதுபோக்காக இருந்தது.

சில நாட்களில்........

ஒரு நாள் ஜெகன் காலையிலேயே வந்தார். "என்ன ரவி, பத்து நாட்களாக கண்ணில் படவேயில்லையே?"

அப்போதுதான் எனக்கே ஞாபகம் வந்தது. நாங்கள் இருவரும் பேசிக்கொள்ளவே நேரம் இல்லைஎன்று.

"கொஞ்சம் வேலை அதிகம் ஜெகன். பேப்பர் படிக்கக்கூட நேரம் இல்லை......" சொல்லும்போதே...... பளிச்சென்று உண்மை தெரிந்தது: "அன்னை மீண்டும் பலித்துவிட்டார், ஜெகன்" சந்தோஷமாகச் சொன்னேன். எனக்கு நாவல், வார இதழ் படிக்க முடியாமல், பாட்டு கேட்க முடியாமல், டிவி பார்க்க நேரமில்லாமல் செய்து, உணர்விலிருந்தே மறக்கடித்துவிட்டார். அந்த இடத்தை வேலையால் நிரப்பி, வருமானத்தை அதிகப்படுத்தி, மனமாற்றத்திற்கும்-சுபிட்சத்திற்கும் உள்ள தொடர்பைக் கண்கூடாகக் காட்டிவிட்டார், ஜெகன்" உற்சாகத்தில் கத்தியது எனக்கே தெரிந்தது.

"நானும் ஆச்சரியத்தில்தான் இருக்கிறேன், ரவி! நீ கிளர்ச்சியை விரும்பவில்லை என்றதும், அதற்கான சந்தர்ப்பம் அனைத்தையும் விலக்கி, உதவியதை என்னவென்று சொல்வது!"

"அன்னை ஒரு முறையும் தவறுவதே இல்லைஎன்பது எவ்வளவு பெரிய சத்தியம்!" கண்கள் பனிக்கக் கூறினார்.

ஒன்று மட்டும் புரிந்தது: 'அன்னை காத்திருக்கிறார். நம் வேலை, முழு நம்பிக்கையோடு கதவைத் தட்டுவதுதான். பலமாக தட்டும்போதுதான் தெரிகிறது, கதவு திறந்தே இருப்பது......' உள்ளே பொன்னொளி!

❀❀❀



## ஆத்ம சோதனை - தினந்தோறும்
## (99% is not 100%)

### [I] உடல் :

| | |
|---|---|
| **1. தேகம்** | → அனைத்து சுத்திகளையும் இரு வேளை செய்தாயா?<br>→ உடற்பயிற்சி செய்தாயா?<br>→ தூய்மையான, எளிமையான ஆடை அணிந்தாயா? |
| **2. உணவு** | → சுகாதாரமான, சத்தான உணவுகளை உண்டாயா?<br>→ ருசிக்காக அல்லாமல், பசிக்காக, சரியான நேரத்தில், சரியான அளவு உண்டாயா? |
| **3. உறைவு** | → அனைத்துப் புழங்கும் இடங்களும் சுத்தமானதாக இருந்ததா?<br>→ அனைத்துப் பொருட்களும் அதனதன் இடத்தில் இருந்தனவா? / வைத்தாயா (organised)?<br>→ எந்தப் பொருளும் வீணாகாமல் முழு உபயோகம் ஆயிற்றா (maximum utilisation)? |
| **4. உழைப்பு** | → இன்றைய கடமைகள் அனைத்தையும் விருப்பத்துடன் செய்தாயா?<br>→ இன்றைய வேலைகள் அனைத்தையும் இன்றே முடித்தாயா?<br>→ பதவிக்கான / வேலைக்கான திறமை, அறிவை அதிகப்படுத்த ஏதாவது செய்தாயா?<br>→ வேலை நேரத்தில் வதந்தி, அரசியல், சினிமா பேசினாயா? |

### [II] உணர்வு :

| | |
|---|---|
| **1. கோபம்** | → இன்று கோபம் வந்ததா / வெளிப்பட்டதா / அடக்கப்பட்டதா?<br>→ யாரின் எந்தச் செயல் அல்லது உன் எந்தக் குறை இந்தக் கோபத்திற்குக் காரணமானது? |

| | | |
|---|---|---|
| **2. பொறாமை** | ➻<br>➻ | இன்று பொறாமை தோன்றியதா?<br>யாரின் எந்த வளர்ச்சி, மகிழ்ச்சி அல்லது உன் இயலாமை இந்தப் பொறாமைக்குக் காரணமானது? |
| **3. பயம்** | ➻<br>➻ | இன்று ஏதாவது ஒரு பொருள் அல்லது நிகழ்வு பயம் ஏற்படுத்தியதா?<br>எந்தச் செயல் அல்லது எண்ணம் இதற்குக் காரணமானது அல்லது பாதுகாப்பற்ற உணர்வைக் கொடுத்தது? |
| **4. ஆசை** | ➻<br>➻ | இன்றுள்ள உன் தகுதி, திறமை, பதவி ஆகியவற்றிற்குச் சமூகம் தரும் சராசரி வரவுகளுக்கு மேல் இன்னும் அதிகம் தேவைஎன்ற ஆசை வந்ததா?<br>இன்றைய செய்கைகளை, தேவைகளை, ஆசைகளைப் பிரித்தறிந்து, தேவைகளை மட்டும் செய்தாயா? |
| **5. வெறுப்பு** | ➻<br>➻ | இன்று யார் மீதும் எரிச்சல், வெறுப்பு வந்ததா?<br>யாரைப் பற்றியெல்லாம் குறை கூறினாய், சாபமிட்டாய்? |
| **6. காமம்** | ➻ | இன்று கிளர்ச்சியூட்டும் எதையும் பார்த்தாயா, படித்தாயா, கேட்டாயா, பேசினாயா? |

## [III] அறிவு :

| | | |
|---|---|---|
| **1. பொய்** | ➻<br>➻ | இன்று சொன்ன பொய்கள் எத்தனை?<br>அதன்பின் இருந்த நோக்கம் என்ன? |
| **2. கள்ளம்** | ➻<br>➻ | இன்று என்ன கயமைத்தனம் செய்தாய்?<br>அல்லது செய்ய ஆசைப்பட்டுக் கட்டுப்படுத்தி கொண்டாய்? |
| **3. சந்தேகம்** | ➻ | இன்று எதற்காகவாவது / யார் மேலாவது சந்தேகப்பட்டாயா? உன்னுள் இருக்கும் எந்த அவநம்பிக்கை இந்த சந்தேகத்திற்குக் காரணமானது? |



| | | |
|---|---|---|
| **4. அதிகாரம்** | ➻ | பலத்தைக் காட்ட, அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள, பயமேற்படுத்த என்னவெல்லாம் செய்தாய் / பேசினாய்? |
| **5. அகந்தை** | ➻<br>➻ | இன்று வரையறுக்கப்பட்ட கடமைகளைத் தவிர புகழுக்காக, பகட்டுக்காக எதையும் செய்தாயா?<br>உதவி, தர்மம், புண்யம் என்ற பெயரில் நட்புக்காக, பாசத்திற்காக, கருணைக்காக ஏதாவது செய்தாயா? |

## [IV] பொது :

**உண்ணும் முன்பும், உறங்கும் முன்பும், செயல்படும் முன்பும், பேசும் முன்பும் அன்னையை நினைத்தாயா?**

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பிரபஞ்சம் மனிதனில் நிலைத்துச் செறிவதால் ஆன்மா உண்டாயிற்று. மனிதன் பிரபஞ்சத்தின் தியானத்தைத் தொடர்வது யோகம்.

***யோகம் என்றால் தியானம்.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அநாகரிகமாக அதிகப் பிரசங்கம் செய்பவனை நோக்கி, “அன்னையின் குரலை எழுப்பியதற்கு நன்றி” என்று நாம் சொல்லவேண்டும்.

***அநாகரீகம் அன்னையின் பலத்த குரல்.***

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**907) நம் வாழ்வையும், பண்புகளையும் அன்னை நோக்கில் அளந்து பார்க்க வேண்டும். அன்னையை நோக்கிச் செல்ல அது உதவும். பதிலாக அன்னையை நாம் நம் வாழ்வின் கோணத்தில் அளந்து பார்க்கிறோம். அதன்மூலம் மனிதனுக்குரிய அதிகபட்ச வளர்ச்சிக்கு மேல் நாம் உயர முடியாது.**

***உயர்ந்த நோக்கம் உயரப் பயன்படும்.***

**வேகமாக மாறும் வாழ்வில் எளிய மனிதன் அன்றைய மகான்களைவிட உயர்ந்தவன்.**

விஞ்ஞானம் புதியதாகக் கண்டுபிடிப்பதை நாம் டெக்னாலஜி என்கிறோம். சமூகம் தன் போக்கை மாற்றிக்கொள்வதை உலகம் மாறிவிட்டது என்கிறோம். நீக்ரோக்களை எப்படி நடத்துவது என்பதில் அமெரிக்கச் சமூகம் மாறிவிட்டது. மனிதன் தன் அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டால் மனிதச் சுபாவம் மாறிவிட்டது என்கிறோம்.

**அன்னை நோக்கில் நாம் வாழ்வைக் காணும்பொழுது வாழ்வும், பிரபஞ்சமும் மாறுகின்றன.**

✡ ஏழைச் சொல் அம்பலம் ஏறாதுஎன்பது உலக வழக்கு; அனுபவம்.

✡ எந்த நாடானாலும் சட்டம், நியாயம் ஏழைக்கும், பணக்காரனுக்கும் மாறுபடும்; தொழிலாளிக்கும், முதலாளிக்கும் மாறுபடும்; ஏழை நாட்டிற்கும், பணக்கார நாட்டிற்கும் நியாயம் வேறு.

✡ பணக்காரன் வீட்டுப் பெண் ஓடிப்போய் திரும்பிவந்தால் அது ஒரு பொருட்டன்று. எவரும் அவளைத் திருமணம் செய்துகொள்வார். ஏழைப் பெண் ஓடிப்போனால் அவளுக்குத் திருமணமாகாது.



✡ சினிமா நடிகையை மணக்க ஆயிரம் பேர் காத்திருக்கின்றனர். அதே போலுள்ள வேறோர் அழகிக்குச் சட்டம் வேறு.

✡ அரசியல்வாதி லஞ்சம் வாங்கினால் உலகம் அதைப் பொருட்படுத்தாது. அதே குற்றத்திற்குச் சாதாரண அதிகாரிக்குத் தண்டனை கிடைக்கும்.

✡ அணுகுண்டு யாரும் செய்யக்கூடாதுஎன அமெரிக்கா கேட்கிறது. அதனிடம் 10,000 அணுகுண்டு உள்ளது. அதுவே இன்று உலகில் அரசியல் நியாயம்.

**பணக்காரனுக்கும் பதவியில் உள்ளவனுக்கும் இன்றுள்ள உரிமையை, அன்னை தம்மை ஏற்பவருக்கும் பெற்றுத் தருகிறார். அதற்கு நாம் அவர் கோணத்தில் வாழ்வை அளந்து பார்க்க வேண்டும்.**

**அடாவடிக்காரனிடம் பிடி கிடைத்துவிட்டால் அவன் விடமாட்டான். அவனுக்கு அது செல்லும்.**

**நியாயமானவன் அடாவடிக்காரனை மீறிச் செயல்பட முடியாது.**

**பொய்யும், திருடும் நிறைந்த இனிமையான பழக்கமுள்ளவன் சாதுர்யமாக நல்ல ஸ்தாபனத்துள் நுழைந்துவிட்டான். அங்கு வேலை செய்வதில்லை; பொறுப்பேற்பதில்லை; ஏராளமாகத் திருடுகிறான். அவன் நடவடிக்கையால் ஸ்தாபனம் அழிந்துவிட்டது. அவனே தலைவரிடம் வந்து ஸ்தாபனத்தை மூடுவது தவிர வேறு வழியில்லை என்கிறான்.**

**அவன் 8 ஆண்டாக அழிச்சாட்டியம் செய்து அழித்த ஸ்தாபனத்திற்கு, தலைவர், பிரார்த்தனையால் 3 நாளில் உயிர் கொடுத்தார்.**

**இந்த ஸ்தாபனத்திலிருந்து எவரையும் விலக்குவதில்லைஎன்ற பழக்கம் உண்டு.**

**மேலும் 5 ஆண்டுகள் அவன் அழிச்சாட்டியத்தைத் தொடர்ந்தான்.**

**ஸ்தாபனத்தை இவனிடமிருந்து காப்பாற்றாவிட்டால் மூட வேண்டிவரும் என்ற நிலை வந்தது.**

**தலைவர் பிரார்த்தனை செய்தார்.**

**இவனுடைய ஊரில் இவன் வீட்டு நிலை மாறியது.**

இனி ஒரு கணம் தாமதிக்காமல் இவன் திரும்ப வேண்டிய கட்டம் வந்தது.

தானே போக வேண்டும்என முடிவு செய்தான்.

அவனே போய்விட்டான்.

அன்னை அரசனுக்குள்ள உரிமையை அன்பனுக்கு அளிக்கிறார்.

அரசனுக்கும் இல்லாத வசதிகளையும் அன்பனுக்கு அளிக்கிறார்.

அன்பன் அன்னையைத் தன் வாழ்வில் ஏற்க வேண்டும்.

தன் அபிப்பிராயப்படி அன்னையைச் செயல்பட அழைக்கக்கூடாது.

❀❀❀

**908) மகாபுருஷர்கள் அவ்வப்பொழுது உலகுக்கு அறிவித்ததை மனிதன் பெற்றுப் பலனடைய இன்னும் பல நூற்றாண்டுகள் ஆகும். ஆன்மாவில் அவர்கள் பெரியவர்கள் என்பதால், நாட்கள் அதிகமாகும். அவர்கள் அன்றாட வாழ்வில், அவர்கள் அக்காலத்து மனிதர்களாகவேயிருந்தனர். இன்று எளிய மனிதன் அவனுடைய அன்றாட வாழ்வில் மகாப் புருஷர்களைத் தாண்டியவனாக இருக்கிறான்.**

*காலத்தால் எளிய மனிதன் உயர்ந்த வாழ்வைப் பெறுகிறான்.*

காலத்தால் உயர்ந்த வசதிகளைப் பெறும் எளிய மனிதன்
மனவளர்ச்சியால் உயர்ந்த பண்புகளையும் பெறுகிறான்.

- ✡ இன்றைய மனிதன் அன்றைய மனிதனைவிட உயர்ந்த மனமுடையவன்; உயர்ந்த பண்புள்ளவன்.
- ✡ இவ்வுயர்வு டெக்னாலஜியில் தெரிவதைப்போல் பண்பில் தெரிவதில்லை.
- ✡ அன்று குழந்தைகளை அடித்து வளர்த்தனர்; பெண்கள் அடிமைகளாக இருந்தனர்; பெரிய மேதையும், பணக்காரன் தயவை நாடினான், ஏழைகளைத் துச்சமாகக் கருதினான்.

  இன்று குழந்தைகளை அடிப்பது அநாகரீகம்என எவரும் அடிப்பதில்லை. பெண்களை அடிமையாக நடத்த எவரும் வெட்கப்படுவர்.



பணக்காரனுக்குச் சமூகத்தில் அன்றைவிட இன்று மரியாதை குறைவு. ஏழைகளை மரியாதையுடன் நடத்துவது அவசியம்.

- ✡ அன்று மனிதன் கொடுமை செய்யப் பிரியப்பட்டான்; பெருமைப்பட்டான். பெரிய மனிதரும், பெரிய ஆத்மாக்களும் கொடுமை செய்யாவிட்டாலும், அவர்களிடம் உள்ளவரை கடுமையாக நடத்தினர். அவர்கட்குக் கடுமை இல்லாவிட்டாலும், அன்றைய நிலையில் கடுமை அவசியம். கடுமை இல்லாமல் கட்டுப்பாடிருக்காது.

  அன்று அவசியத்தால் கடுமையிருந்த இடங்களிலும் இன்று இனிமை, பண்பு நிறைந்துள்ளன. இது காலத்தால் நடப்பது.
- ✡ ஆன்மீகம் என்றால் சாம்பல் சாப்பிடுவது, ஆணி மேல் படுப்பது, சாட்டையால் தன்னையே அடித்துக்கொள்வது போன்ற கடுமையான செயல்களாகும்.

  இன்றைய ஆன்மீகம் sunlit path சூர்யோதய சுபிட்சமாகும்.
- ✡ காலம் சமூகத்தை மென்மையாக்கியது.
- ✡ காலத்தால் வளர்ந்த மனம் பதம், பக்குவம், பண்பு, இதம், இங்கிதம் பெற்றுள்ளது.
- ✡ ஒற்றைக் கால் தவம், தலைகீழே தொங்கிய நிஷ்டையெல்லாம் மாறி, சுகமான ஆசனத்தில் சௌகரியமாக அமர்ந்து நிஷ்டை செய்வது இக்காலம்.
- ✡ பொதுவாகக் கடுமை அழிந்துவிட்டது. அழிந்தது திருவுருமாறி இனிமையாக, சுகம் நிறைந்த சுமுகமாயிற்று.
- ✡ மனித மனம் உயர்ந்த தெய்வ நிலையை நாடுகிறது.
- ✡ பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, ஜெயில், விளையாட்டரங்கம் ஆகிய இடங்களில் கடுமை மறந்துவிட்டது; வலி போய்விட்டது.

*தொடரும்.....*

❀❀❀

## ஜீவிய மணி

**சென்ற வழியே திரும்ப முடியாதது சிருஷ்டி.**

## *தினசரிச் செய்திகள்*

கர்மயோகி

1990 மே முதல் தினசரி ஒரு செய்தி எழுத ஆரம்பித்தேன். அது 2005 வரை தொடர்ந்தது. செய்திகள் 20,000 ஆனபின் எழுதுவதை நிறுத்திவிட்டேன். இவற்றுள் முதல் 2000 செய்திகளை 'யோக வாழ்க்கை' என்ற தலைப்பில் வெளியிட்டோம். செய்திகள் ஆரம்பத்தில் ஆங்கிலத்திலும், பிறகு தமிழிலும் எழுதப்பட்டன. கடைசி 1000 செய்திகள் டைப் செய்யப்படவில்லை. சுமார் 15,000க்கு மேற்பட்ட ஆங்கிலச் செய்திகளுக்குப் பொருத்தமான தமிழ்ச் செய்திகளையும் உடன் எழுதியிருக்கிறேன். இவை நேரடியான தமிழ் மொழிபெயர்ப்பில்லை. அவற்றுள் 700 செய்திகள் நேரடியாக அன்னை, பகவான் எழுத்தினின்று எடுக்கப்பட்டவை. மற்றவை இரு வகையின. ஒன்று, பகவான் கூறிய தத்துவக் கருத்துகளை வாழ்க்கைக்குப் பொருத்தி எழுதியவை. மற்றது, பொதுவாக வாழ்வுக்குரிய சிறப்பை வெளிப்படுத்துவது. *The Life Divine*இல் 1452 பாராக்கள் ஒவ்வொன்றும் ஒரு கருத்தைத் தாங்கி வருகிறது. அன்னை எழுதிய 18 வால்யூம்களிலும், Agenda அஜெண்டா 13 வால்யூம்களிலும் உள்ள கருத்துகளை வாழ்க்கைக்குப் பொருத்தி எழுதப்பட்டவை இச்செய்திகள். ஒவ்வொரு செய்தியும் ஓர் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆரம்ப நாட்களில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் 5 பேர் அன்னையை ஏற்று வரத் தொடங்கினர். அவர்களுக்கு சர்வீஸ் ஆகும்பொழுது Vice-Chancellor பதவி தேடி வந்தது. இதை நான் அறிவேன். அவர்கள் அறியவில்லை; பாராமுகமாக இருந்தனர். அந்த நாட்களில் Vice-Chancellor பதவி கல்லூரி ஆசிரியர்கட்குக் கிடையாது; அரசியல் அனுபவம் பெற்றவர்க்கேயுண்டு. என் அபிப்பிராயத்தை நான் அந்த அன்பர்களிடம் சொல்லியிருந்தால், அவர்கள் என்னைக் கேலி செய்திருப்பார்கள். அதனால் என்னால் அதைக் கூற முடியவில்லை. அருள் நெருங்கி வரும்பொழுது சிலர் பாராமுகமாக இருப்பார்கள்; மற்றவர் பதட்டப்படுவர்; வேறு சிலருக்குக் கோபம் வரும்; சந்தேகப்படுவதும் உண்டு. வந்த வாய்ப்பு



அவரருகிலிருந்த அடுத்தவர்க்குப் போனதை நான் கண்டேன். ஒருவர் கோபப்பட்டுத் திட்டினார். எவரைத் திட்டினாரோ, பதவி அவருக்குப் போய்விட்டது. அடிக்கடி அன்னை சாதகர்களிடம், "நீங்கள் நான் கூறியதை ஏற்கவில்லை. எப்படிச் சம்பந்தமில்லாதவர் என்னை ஏற்றுக்கொண்டார் எனப்பாருங்கள்" எனக் கூறுவார். இக்கருத்தை,

**திட்டு அதிர்ஷ்டத்திற்கு டிரான்ஸ்பர் ஆர்டர்**

என ஒரு செய்தி எழுதினேன். இந்தச் செய்திகளனைத்தும் ஜனவரிக்குள் websiteஇல் - www.karmayogi.net - போட்டுவிடுவார்கள். சுமார் 10,000 ஆங்கில, தமிழ்ச் செய்திகளை ஏற்கனவே போட்டாயிற்று. இவற்றை நூலாக வெளியிட 20 புத்தகங்கள் வெளியிட வேண்டும்; அதற்குப் பல ஆண்டுகள் ஆகும். அன்பர்கள் இவற்றைப் படிக்கும்பொழுது சில அவர்கள் அனுபவத்தைப் பிரதிபலிக்கும்; மற்றும் சில வாழ்வில் பயன்படும்; வேறு சில செய்திகள் நெஞ்சைத் தொடும். அவர்கள் e-mail மூலம் தங்கள் அனுபவத்தையும், அந்தச் செய்தியையும் எனக்கு, அவர்கள் பெயர், விலாசமுடன் அனுப்பினால் மலர்ந்த ஜீவியத்தில் வெளியிட முடியும்.

இதில் நான் விரும்புவது ஒன்றுண்டு. ஓர் அன்பர் இந்தச் செய்திகள் அனைத்தையும் படித்தபின், அவர் மனத்தைத் தொடும் ஒரு செய்தியைக் குறித்து எனக்கு எழுதினால், எனக்கு அது பயன்படும். 20,000 செய்திகளில் ஒன்று ஒருவர் மனத்தைத் தொடுகிறதுஎன்பது அன்பர் மனநிலையைக் காட்டுகிறது. அத்துடன், மேலும் நான் அறிபவை,

- ✡ **அன்பருக்கும், பகவானுக்குமுள்ள உறவை அது விளக்கும்.**
- ✡ **செய்தி ஏன் அவர் மனத்தைத் தொட்டதுஎன அது கூறுவதால், அப்பாணியை அறிய உதவும்.**
- ✡ **அது தமிழ்ச் செய்தியானால், ஆழ்மனம் அன்னையை ஏற்கும் வகையை அறிய முடியும்.**
- ✡ **அன்பர் மனநிலையை நான் அதிகமாக அறியும் பாங்கு அது.**

❀❀❀

## ஆன்மாவின் விடுதலை*

கர்மயோகி

{I}

✡ **சுத்தி முக்தி தரும்.**

மனம் தூய்மைப்பட வேண்டும். அத்துடன் ஆசைக்குட்பட்ட ஆத்மாவும் தூய்மை பெற்றால் முக்தி கிட்டும்.

❀ ஆசையழிந்தால் ஆத்மாவின் பிராணன் (உயிர்) விடுதலை பெறும்.

தவறான உணர்வு தன்னையழித்துக்கொண்டால் இதயம் விடுதலை பெறும்.

எண்ணம் சிறுமையை இழந்தால் அறிவு விடுதலை பெறும்.

ஜடமான அறிவு அழிந்தால் ஞானம் உதயமாகும்.

பிராணன், இதயம், அறிவு ஆகியவை கரணங்கள்.

கரணங்கள் தூய்மைப்பட்டால், கரணங்கள் விடுதலை பெறும்.

இது ஆத்ம விடுதலையாகாது.

✡ **நிர்வாணம் என்பது அமைதியான பிரம்மம்.**

நம் இலட்சியத்திற்குத் தேவையான முழு விடுதலை அதனால் கிடைக்காது.

பிரம்மத்தினின்று குறைகளை அகற்றும் விடுதலையது (negative freedom).

* *Synthesis of Yoga*வில் நான்காம் பகுதி பூரணயோகம். (அதில் இத்தலைப்பு 8ஆம் அத்தியாயம்).



பாடம் படிக்க வேண்டிய பையன் நாள் முழுவதும் T.V. பார்ப்பது படிக்க உதவாது. T.V. பார்ப்பதை நிறுத்துவது நல்லது. இனி தவறு தொடராது. T.V. பார்ப்பதை நிறுத்தியதால் பாடம் வாராது. பாடம் வர படிக்க வேண்டும். வாழ்வின் சிறுமைகளில் உழலும் ஆத்மா அவற்றினின்று விடுதலை பெறுவது பையன் T.V. பார்ப்பதை நிறுத்துவது போன்று. பையன் பள்ளிக்கூடம் போனது படித்துப் பட்டம் பெற. ஆத்மா ஜன்மம் எடுத்தது வாழ்வில் ஆத்மா மலர. வாழ்வின் இருளினின்று விலகியது முதற் கட்டம். அது ஆத்ம இலட்சியத்தைப் பூர்த்தி செய்யாது. அது நடைபெற ஆத்மா வாழ்வை ஏற்று, அதை உயர்ந்த கோட்பாடுகளால் நடத்தினால் வாழ்வில் ஆத்மா மலரும். அப்படி மலர்வது சிருஷ்டியில் ஆத்மா தேடும் ஆனந்தம் பெற உதவும். அதுவே ஆத்ம இலட்சியம்.

✡ **நிர்வாணம் மோட்சம் பெற உதவும்; அது நம் குறிக்கோள் இல்லை.**

நமது குறிக்கோள் வாழ்வில் ஆத்மா மலர்வது.

ஒரு வக்கீல் கேஸ் நடத்தித் தோற்கிறார்.

என்றாலும் அவருக்குரிய பீஸைப் பெறுகிறார்.

அது தொழிலில் பணம் பெறும் வெற்றி.

கேஸை ஜெயித்து, தமக்குரிய பணம் பெறுவது அடுத்த நிலை.

கேஸை எப்படி வேண்டுமானாலும் ஜெயிக்கலாம்.

ஒரு சட்ட பாயிண்டு மூலம் ஜெயிப்பது சட்டம் ஜெயிப்பது.

கேஸில் நியாயம் உண்டு.

நியாயம் ஜெயிப்பது அடுத்தது.

தர்மம் நியாயத்தைவிட உயர்ந்தது.

கேஸ் ஜெயிப்பதன்மூலம் தர்மத்தை நிலைநாட்டுவது கேஸில் ஆத்மா மலர்வதாகும்.

{II}

✡ **ஆசை பிராணனின் உயிர் நிலை.**

ஆசையின் கடமையது.

ஆசை பறக்கும், துடிக்கும், பதைபதைக்கும்.

அதற்கு சூட்சும முடிச்சுண்டு.

அது ஆத்மாவில் உள்ளது.

அதை, புத்தி ஆதரிக்கும்.

அதற்குப் பிரதிஷ்டைஎனப் பெயர்.

அறிவு ஆசைக்குத் துணைபோவதால் ஆசைக்கு வேகம் எழுகிறது.

கீழிருந்து பார்த்தால் இப்படித் தெரிவதை மேலிருந்து பார்க்கலாம்.

மேலிருந்து பார்த்தால் ஆசையை ஆத்மா ஆதரிக்கிறது.

பிரம்மம் பிரபஞ்சத்தை உற்பத்தி செய்து, அதன் பிரதிநிதியாக ஜீவாத்மாவை ஏற்படுத்தியுள்ளது.

நாம் ஜீவாத்மாவிலிருந்து செயல்படும்பொழுது அது பிரபஞ்சமாகவும், பிரம்மமாகவும் தெரியும்.

பிரம்மம் ஆத்மாவாகச் செயல்படும் வகை பிராணனில் ஆசை துடித்துப் பறப்பதாகும்.

{III}

✡ **ஜீவாத்மா அகந்தையை நாடினால், ஆசை உயிர் பெற்று, சூடு பிடித்து, வலி எழுகிறது.**

ஆத்மாவுக்கு இரு வழிகள் உள.

1. ஆத்மா தன்னையிழந்து, சலனமற்று, மனத்தில் உறையலாம்; அல்லது
2. அது சத்தியஜீவியத்தையடைந்து, இறைவனின் செயலுக்குக் கருவியாகி, பிரம்மம் பெறும் ஆனந்தத்தைத் தானும் பெறலாம்.



✡ **ஆசையழியும் வரை அகந்தையைக் களைவது சிரமம்.**

அறிவு தன்னை இறைவனிலிருந்து பிரிந்த நிலையை ஏற்பது தவறு.

பிரம்மத்துடனும், பிரபஞ்சத்துடனும் இணைந்த நிலையை - ஒருமையை - ஏற்பதே அறிவுக்குப் பொருத்தமானது.

அகந்தை அழிவதே அவ்வழி.

{IV}

✡ **நாம் பிரம்மத்தின் பகுதி என்பதே நம் ஜீவனுக்குரிய சத்தியம்.**

அறிவு அதை நேரடியாகத் தெரிந்துகொள்ள முடியாது.

ஆத்மாவில் நிலைத்தால்தான் - லயித்தால்தான் - அது விளங்கும்.

சமாதியை அடைவது கிளைப்பாதை.

நமக்கு அது தேவையில்லை.

நம் முழு ஜீவனையும், சுபாவத்தையும் இறைவனின் சுபாவமாக மாற்றுவது நம் இலட்சியம்.

அகந்தையினின்று விடுபட்டு அதைச் சாதிப்பது யோகம்.

{V}

✡ **பிரம்மம் வேறு, ஜீவாத்மா வேறுஎன்பதே எல்லாத் தவறுகட்-கும் காரணம்.**

நாமும் இறைவனும் ஒன்றேஎன்பது இரகஸ்யம்.

ஆத்மாவை அடைந்த நிலையில் அது விரிந்து, பிரபஞ்சமாகி, பிரம்மத்தை வெளிப்படுத்தும். அகந்தையுள் உள்ள வரை அது இயலாது.

{VI}

✡ **அகந்தை அளவுக்குட்பட்டது.**

அது பல பக்கங்களிலும் தடைக்குட்பட்டது.

**அதனால் அது தவறான அறிவுக்குத் தகுதியளிக்கிறது.**

**தனித்த நிலையை விட்டு தனக்குரிய அகன்ற ஐக்கியத்தை ஆத்மா நாடினால் பூமாதேவியுடன் அது இணையும்.**

**அப்போது மனிதனுடைய செயல், இறைவனுடைய செயலாகும்.**

**அது சரி.**

**அதன் வழி ஆத்மா அனந்தத்துள் நுழையும்.**

**{VII}**

✡ **உறுதிஎன்பது ஆசையின் சுபாவம்.**

**அதிலிருந்து விடுதலை பெறவேண்டும்.**

**அகந்தையிலிருந்து விடுதலை பெறவேண்டும்.**

**உறுதியழிவதால் இறைவனுடன் ஒன்று சேரவேண்டும்.**

**உறுதியுடன் ஆசையும், அகந்தையும் அழியும்.**

**அதுவே முக்தி.**

☆ **சுத்தி தருவது முக்தி.**

☆ **அகந்தை மனிதனை பிரம்மத்தினின்று பிரித்துவிட்டது.**

☆ **அதனால் பிரபஞ்சத்தினின்றும் நம்மைப் பிரித்துவிட்டது.**

☆ **அகந்தைக்கு ஆசை ஆதரவு.**

☆ **ஆசைக்கு ஆத்மாவின் அஸ்திவாரமாகப் புத்தி செயல்படுகிறது.**

☆ **ஆசையும் அகந்தையும் அழிந்து, பிரபஞ்சத்துடன் இணைந்து, பிரம்மத்துடன் ஒன்றி, பிரம்மம் வாழ்வில் ஆத்மாவாக மலர்வது இறைவன் திருவுள்ளம் இக வாழ்வில் இன்பமாகப் பூர்த்தியாவதாகும்.**

❀❀❀



# யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**70. அபிப்பிராயம் ஒன்றைக் கைவிடு.**

சூட்சுமப் பார்வைக்கு உலகில் உலவும் அபிப்பிராயங்கள் ஊசிபோல் தெரியும்.

மனம் குறுகியது. அது ஒரு பக்கம்மட்டுமே காணவல்லது.

சிந்தனை அதனுள் ஒரு பகுதி.

**அபிப்பிராயம்என்பது**
**ஒரு விஷயத்தைப்பற்றி நம் மனத்தின் முடிவு.**

அதனால் இது உண்மையாக இருக்க முடியாது.

மனம் உண்மையை அறிய முடியாதது.

காமராஜ் பெரியவர்என்பது என் அபிப்பிராயம்.

காமராஜ் பெரியவரல்லர்என்பது மற்றோர் அபிப்பிராயம்.

என் அபிப்பிராயம் நல்ல அபிப்பிராயம் எனலாம்.

காமராஜ் எப்படிப்பட்டவர்என்பதை ஆராயும் திறன் என் அபிப்பிராயத்திற்கில்லை.

**குறுகிய மனம் ஒரு விஷயத்தைப் பற்றி எடுக்கும் முடிவு மேலும் குறுகியதாக இருக்கும்**. அதில் விசேஷமில்லை.

அபிப்பிராயமே இல்லாத மனம் (open mind) வெள்ளைமனம் எனப்படும்.

அதற்கு மனத்தின் சக்தியுண்டு.

அபிப்பிராயம் எப்படி உருவாயிற்றுஎன்று கண்டு, அதைக் கரைத்தால், மனம் அபிப்பிராயம்என்ற தளையிலிருந்து விடுபடும்.

ஒரு தளையிலிருந்து விடுபட்டாலும், மனம் அனுபவிக்கும் சுதந்திரம் பெரியது.

ஓர் அபிப்பிராயம் விலகினாலும், பிரச்சினை உடனே விலகும்.

ஒருவர் முதுகில் cyst கட்டி போன்ற உருண்டை 5 வருஷமாக இருந்தது. டாக்டர் கண்ணில் அது பட்டவுடன் அதை அறுத்துவிடச் சொன்னார். அவர் தமக்குத் தெரிந்த அன்பரிடம் இதைக் கூறினார்.

அன்பர் 1 வாரம் பொறு என்றார்.

மறுநாள் அது தானே உடைந்துவிட்டது.

**டாக்டர் அறுத்து எடுப்பார்என்ற அபிப்பிராயம் மனத்திலிருந்து விலகிய-வுடன், கட்டி உடைந்துவிட்டது.**

விஷயம் எதுவானாலும், அதில் பிரச்சினை எழுந்தால், அதைப் பற்றி நமக்குள்ள அபிப்பிராயங்களை விலக்கினால், பிரச்சினை தீரும்.

**பிரச்சினையே நம் அபிப்பிராயம்.**

அபிப்பிராயத்தை விலக்குவது சிரமம்.

அன்னையை நம்பியவருக்கு அதை விலக்க முடியும்.

Pride & Prejudiceஇல் எலிசபெத் தன் அபிப்பிராயத்தை மாற்ற படும் போராட்டம் எவ்வளவுஎன நாம் கண்டோம். டார்சிக்கு அவள்மீது காதல் எழுந்தாலும், எலிசபெத் அபிப்பிராயம் மாற மறுக்கிறது. பெம்பர்லிதான் அதை மாற்றியது.

*தொடரும்....*

❀❀❀

# அறிவிப்பு

**டிசம்பர் இதழுடன் சந்தா முடிவடையும் அன்பர்கள் தாமதமின்றி சந்தாவினை புதுப்பிக்க வேண்டுகிறோம்.**

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Puducherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Puducherry-11 on behalf of The Mother's Service Society, Puducherry-11.
Editor: N. Asokan

# முறிந்த முதுகெலும்பு

முதுகெலும்பில் ஏராளமான பகுதிகளுண்டு. அவற்றுள் சில பாதிக்கப்பட்டால், அதன்பின் எழுந்து நிற்க முடியாது. குரல்வளை பாதிக்கப்பட்டால் பேச முடியாது. மாரிஸ் குட்மென் என்பவர் விமானம் ஓட்டுபவர். விமானம் விழுந்து அவருக்குப் பல பலத்த காயங்கள் ஏற்பட்டன. முதுகெலும்பில் முக்கிய பகுதி உடைந்துவிட்டது; குரல்வளை சேதமாயிற்று; சுவாசிக்க முடியவில்லை; செயற்கை சுவாசம் கொடுத்தனர்; உணவைக் குழாய் மூலம் செலுத்தினர். அவரால் கண் மட்டும் இமைக்க முடிந்தது. எவ்வளவு காலம் வேண்டுமானாலும் அவரை அந்நிலையில் உயிருடன் வைத்து இருக்கலாம். அவர் எழுந்து நிற்பது, நடப்பது, பேசுவது, உண்பது இனி நடவாதுஎன டாக்டர்கள் கூறியபொழுது அவர்,

**"நீங்கள் கூறியவற்றை நான் மறுக்கிறேன். கிருஸ்மஸுக்குள் நான் நடப்பேன். ஆஸ்பத்திரியை விட்டுப் போவேன்"**

எனக் கூறினார். ஒரு மாதம் கழித்து தள்ளுவண்டியில் தலைமை டாக்டரைப் போய் பார்த்துப் பேசினார். கிருஸ்மஸில் ஆஸ்பத்திரியை விட்டு வெளிவந்தார். இன்று T.V.இல் பேசுகிறார்.

- ✡ **மன உறுதி நினைத்ததைச் சாதித்தது.**
- ✡ **அது ஆத்ம உறுதியானால் அதிகமாகச் சாதிக்கும்.**
- ✡ **அதற்கு அன்னை துணையிருந்தால் எதுவும் நடக்கும்.**

இதைக் கேட்டவர் Morris Goodman is a standing miracle மாரிஸ் குட்மென்னுடைய அனுபவம் கண்கண்ட தெய்வ அற்புதம் என்றார்.

"நீ எதை ஆர்வமாகக் கருதுகிறாயோ, நீ அதாகவே மாறுவாய்" என்பது பகவத் கீதை.

இவரது website: www.themiracleman.org

❀❀❀

# சூட்சும உலகம்

India – After Gandhi. மகாத்மாவுக்குப்பின் இந்தியாஎன்ற புத்தகம் படித்தேன். அதில் தமிழ்நாட்டுப் பாடகியின் பெரிய போட்டோ போட்டிருந்தனர். புத்தகம் 800 பக்கம். எப்பொழுது எடுத்தாலும் இந்த போட்டோ உள்ள பக்கமே வரும். இப்பாடகியை காந்தி மண்டபத்தில் 50 ஆண்டுகட்கு முன் ஒரு முறை பார்த்திருக்கிறேன். ஏன் இப்படம் என் பார்வையில் அதிகமாகப்படுகிறதுஎன எனக்குத் தோன்றியது. இவர் அன்னையை தரிசித்தவர், அதனாலிருக்குமா? எனத் தெரியவில்லை. இவரை மணக்க இருந்தவரை நான் நெருக்கமாக அறிவேன், அது காரணமாகுமா? சுமார் 20 நாட்களுக்குப்பின் இவருக்குச் சொந்தமான பத்திரிகை ஆசிரியரிடம் இருந்து கடிதம் வந்தது. அப்பத்திரிகை அன்னையைப் பற்றி எழுத ஆரம்பிக்க இருப்பதைக் கடிதம் தெரிவித்தது.

- ✡ **உலகில் நடப்பவை முன்கூட்டி சூட்சும உலகில் பூர்த்தி ஆகும்.**
- ✡ **அவை சூட்சுமமாகத் தங்களை அறிவித்தபடியிருக்கும்.**

எந்த சிறு காரியமும் பின்வருவதை முன்கூட்டி அறிவிக்கும். கவனமாகப் பார்த்தால் தெரியும். எதை, எப்படிப் புரிந்துகொள்ள வேண்டும்என்பது அனுபவத்தாலும், பயிற்சியாலும் தெரியும். 37 வருஷத்திற்குமுன் வெங்கட்டா நகருக்கு நரிமேடுஎனப் பெயர். அப்பொழுது 2 அல்லது 3 வீடுகள் மட்டுமிருந்தன. ஒரு நாளிரவு 8 மணிக்கு 27ஆம் நம்பர் வீட்டிலுள்ள ஒருவரைப் போய்ப் பார்த்தேன். 8 வருஷம் கழித்து நான் இங்கு குடிவரப்போவதை அச்செயல் சுட்டிக்காட்டியிருப்பது இன்று புரிகிறது.

- ✡ ***தாயறியாத சூலில்லை.***
- ✡ ***முன்கூட்டி அறிவிக்கப்படாத முழுச் செயலில்லை.***

❀❀❀

December 2007 Jiviyam 13 Malar 8
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/06-08
Price: Rs.5/- WPP No.45/06-08

புதிய வெளியீடு

**கர்மயோகியின்**

**எங்கள் குடும்பம் (பாகம் 2)** ரூ.250/-

**உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** ரூ.100/-

**யோக வாழ்க்கை விளக்கம் IV** ரூ.150/-

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

**லைப் டிவைன் விரிவுரைகள்**

*தமிழாக்கம்:* **என். அசோகன்** ரூ.100/-

**LECTURES ON SRI AUROBINDO'S THE LIFE DIVINE**

**Garry Jacobs** ரூ.150/-

**SATYA JYOTHI**

**(CONCISE TRUISMS)**

**N.Asokan** ரூ.200/-

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.

கிடைக்குமிடம்

**பாண்டியில்**
**மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,**
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2214231

**சென்னையில்**
**மாம்பலம் தியான மையம்,**
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை-600 035.
✆: (044)-24347191